# பாட்டி சொன்ன கதைகள்



— முருகபூபதி —

மல்லிகைப்பந்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டி சொன்ன கதைகள்

(உருவகம்)

- முருகபூபதி -

மல்லிகைப் பந்தல்

மல்லிகைப் பந்தல்

201,1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி

கொழும்பு - 13.

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு - செப்டம்பர் 1997

**விலை:** ரூ 25. 00

| | | |
|---|---|---|
| TITLE | : | PAADDI SONNA KATHIKAL |
| SUBJECT | : | STORIES TOLD BY GRANDMA |
| AUTHOR | : | MURUGA POOPATHY |
| NO.OF PAGES | : | 96 |
| SIZE | : | 12.5 & 18CM |
| TYPES | : | 12 POINT |
| PAPER | : | 11.6 KG CREAMWOVE |
| PRICE | : | Rs. 25. 00 |
| BINDING | : | ART BOARD |
| PUBLISHER | : | MALLIKAI PANTHAL<br>201 1/1 SRI KATHI RESAN STREET<br>COLOMBO. 13<br>SRI LANKA. |
| IN INDIA | : | KUMARAN PUBLISHERS<br>79,1ST STREET, KUMARAN COLONY,<br>VADAPALANI, CHENNAI -600 026. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்றும்

எம் நெஞ்சமதில்

வாழும்

குலதெய்வம்

எமதருமைப்பாட்டி

தையலம்மாவுக்கு

இந்நூல்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிறநூல்கள்

1. சுமையின் பங்காளிகள் (சிறுகதை)
   (சாகித்திய மண்டல பரிசில் பெற்றது)
2. சமாந்தரங்கள் (சிறுகதை)
3. சமதர்ம பூங்காவில் (பயண இலக்கியம்)
4. நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் (கட்டுரை)
5. சந்திப்பு (நேர்காணல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| ★ | பதிப்புரை | 6 |
| ★ | கடிதம் | 10 |
| ★ | முன்னுரை | 13 |
| ★ | கருத்துரை | 23 |
| 1. | விதி | 29 |
| 2. | 'மூளை' | 37 |
| 3. | குணம் | 46 |
| 4. | தனித்துவம் | 51 |
| 5. | பலம் | 55 |
| 6. | அடக்கம் | 62 |
| 7. | ஞானம் | 67 |
| 8. | சமர்ப்பணம் | 72 |
| 9. | உழைப்பு | 77 |
| 10. | தகுதி | 82 |
| 11. | கறை | 87 |
| 12. | மனிதர்கள் | 92 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மல்லிகையால் வளர்ந்தவர்கள் பலர்; மல்லிகை யால் வளர்க்கப்பட்டவர்கள் சிலர். அப்படிக் கண்டு பிடித்து வளர்க்கப்பட்டவர்களில் முதலிடம் வகிப்பவர் தான் நண்பர் முருகபூபதி அவர்கள். மற்றவர்கள் மேமன் கவி, திக்குவல்லைக் கமால், ராஜஸ்ரீகாந்தன், கெக்கராவ ஸஹானா போன்றவர்கள்.

இன்று போல இருக்கின்றது; கால் நூற்றாண்டுக்கு முன்பு - நான் நினைக்கிறேன் அது 1972ம் ஆண்டென- அந்தக் காலத்தில் முருகபூபதி கதையொன்று அனுப்பி இருந்தார், படித்துப் பார்த்தேன், பிடித்திருந்தது. அக்கதை பல தகவல்களை எனக்குத் தந்து நம்பிக்கையூட்டியது. நீர் கொழும்புப் பிரதேசத்துக் கரையோர, மீனவ மக்களைப் பற்றிய உள்ளடக்கம் கொண்ட கதையது. அவர்களது வாழ்வின் அடி ஆதாரமான மன உணர்வுகள், அபிலாஷைகள், பேச்சு வழக்குகள் அக் கதையில் பரவிக் கிடந்ததை நான் முதல் வாசிப்புப் பார்வையிலேயே மட்டிட்டுக் கொண்டேன். அந்த மாசத்து மல்லிகை யிலேயே சிறு சிறு திருத்தங் களுடன் அக் கதையைப் பிரசுரித்து விட்டேன்.

அபிப்பிராயங்கள், கருத்துக்கள், விமரிசனங்கள் அக்கதை பற்றிப் பின்னர் காரசாரமாக வெளிவரத் தொடங்கின. நானறிந்தவரையில் ஓர் எழுத்தாளனுடைய கன்னிப் படைப்புக்கு இத்தனை தூரம் முக்கியத்துவம் கொடுத்துச் சுவைஞர்கள் தத்தமது அபிப்பிராயங்களைச் சொன்னது மல்லிகை வரலாற்றில் இதுதான் முதல் தடவை என நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் கூட, தனியாக நானிருந்து சிந்திக்கும் வேளைகளில், முருகபூபதியை பற்றி நினைக்கும் சமயங் களில் நான் வியப்பினால் மலைத்துப் போவதுமுண்டு. அத்தனை மென்மையானவர்; ஆழமான நட்புக்கு நெருக்கமானவர். சக தோழர்களுக்கு உதவுவதில் தனிப் பெருமை கொள்பவர். அதே சமயம் இறுக்கமான மனத் திண்மையை இயல்பாகவே பெற்றுக் கொண்ட மன வலிமை கொண்டவர்.

இந்தப் பண்புகள்தான் என்னை அவரிடம் நெருங்கி உறவாட வைத்தன என்று இன்று உறுதியாக நம்புகின்றேன்.

'தரமான எலிப்பொறி செய்பவன் ஓர் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்திருந்தாலும் கூட, அவன் குடிசையை நோக்கி ஓர் ஒற்றையடிப் பாதை தானே வளரும்-' என்பது ஓர் ஆங்கிலப்பழமொழி.

மல்லிகைக் காலத்திலும்,அதற்கு முன்பும் கூட, கொழும்பு-யாழ்ப்பாணம் என்றிருந்த எனது இலக்கியப் பாதையை- வழிப் பயணத்தைத் தனது பிரதேசமான நீர்கொழும்பை நோக்கித் திசை திருப்பி விட்டவர் இவர். அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய பல இலக்கிய நெஞ்சங்களை எனக்கு நெருக்கமாக்கியவர் இந்தப் பூபதிதான். அத்துடன் 'நீர்கொழும்புச் சிறப்பு மலர்' என்ற பெயரில் ஒரு விசேஷ மல்லிகை மலரையும் வெளிக் கொணர்வதற்கு ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பை நல்கி வெற்றியடையச் செய்தவரும் இதே பூபதி தான்.

அன்னாரது 'பாட்டி சொன்ன கதைகள்' என்ற இந்த நூலை மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளியிடுவதில் மெய்யாகவே மகிழ்ச்சியடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபதியின் பாட்டிக்குப் பெயர் தையலம்மா. இதைப் போலவே, எனக்கும் ஒரு பாட்டி இருந்தவர். பூபதியின் பாட்டி தாய் வழிப் பாட்டி; என்னுடைய பாட்டியோ தந்தை வழிப் பாட்டி. பெயர் அன்னப் பிள்ளை. இந்தத் தாய் வழிப் பாட்டி, தந்தை வழிப் பாட்டி என்ற வம்சத் தொடரில் தாய் வழிப் பாட்டிகள்தான் முதலிடம் வகப்பவர்கள். தந்தை வழிப் பாட்டிகள் எப்படித்தான் இருந்தாலும் ஓர வஞ்சனை காட்டித்தான் தீருவார்கள். இதற்குக் காரணம் உண்டு. மகள் பெற்றெடுத்த பிள்ளைகளும் மகனுக்காக ஆரோ ஒருத்தி பெற்றெடுத்த பிள்ளைகளும் ஒன்றா-என்ன? மனரீதியான முரண்பாடுகள். பூபதிகொடுத்து வைத்தவர். அவருக்குத் தாய் வழிப் பாட்டியின் அன்பும் பாசமும் தாராளமாகக் கிடைக்கப் பெற்றதில் உள்மனசுக்குள் மெய்யாகவே பொறாமைப்பட்டிருக்கின்றேன்.

இது நான் கண்ட அனுபவ உண்மைகள். அதனால் வாய் மொழி மூலம் கதை என்று சொல்லப்பட்ட கலை தோன்றியதே இந்தப் பாட்டிமாரின் வாயிலிருந்துதானோ என நான் நினைத்துப் பார்ப்பதுண்டு. அந்தளவிற்குத் தாங்கள் கண்டது, கேட்டது, அனுபவத்தில் அறிந்தது எல்லாவற்றையும் சேர்த்து செதுக்கிக் கதை பண்ணுவதில் இந்தப் பாட்டிமார்கள் தனித் தகுதி பெற்றுத் திகழ்ந்துள்ளதுடன் அக்கலையைக் காலங் காலமாக வாய்மொழி மூலம் தங்கள் பேரர்களிடம் சொல்லிச் சொல்லியே தக்க வைத்துக் கொண்டு வந்துள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கதொன்றாகும்.

பூபதி கடல் கடந்து அவுஸ்திரேலியா போனது அடியோடு விருப்பமில்லை, எனக்கு. அவர் போவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெனத் தீர்மானித்துவிட்ட பின்னர், தனக்கு அந்தரங் கமான, ஆத்மார்த்திகமான நண்பர்கள் எனத் தான் நம் பிய சிலரை அழைத்துத் தனது வீட்டிலேயே மதிய போஜன விருந்தொன்றைத் தந்து களித்தார்.

இது ஒரு பிரிவுபசார விருந்துஎன்ற தகவலே கடைசி வரை எனக்குத் தெரியாது. விருந்து முடிய, மகிழ்ச்சி யுடன் நாங்கள் கொழும்பு திரும்ப ஆயத்தமானோம். அந்தச் சமயம் பூபதி என்னைத் தனியே அழைத்துச் சென்று தான் அவுஸ்தி ரேலியா போகப் போகும் சங்கதியை மெதுவாகச் சொன்னார்.

எனக்கு இது நம்பமுடியாத அதிர்ச்சியாக இருந்தது. அவர் செய்ய வேண்டிய வேலைகள் இங்கு நிறையக் காத் திருந்தன. அவரது எதிர்காலம் ரொம்பவும் பிரகாசமாகப் பிரகாசிக்கக் கூடிய சூழ்நிலை இங்கு நிலவியது. என்னால் அவரது இந்த முடிவைச் சீரணிக்கவே இயலவில்லை.

அன்று இரவு கூடச் சரியான தூக்கமில்லை. ஒரே மனப்பாரம். அத்தனை நெஞ்சு நோவு.

போனவர் இந்த மண்ணை மறக்கவில்லை; மக்களை மறக்கவில்லை ஈழத்து இலக்கியத்தை மறக்கவில்லை.

அப்படி மறக்கவில்லை என்பதன் அறிகுறிதான் இந்தப் பாட்டி சொன்ன கதைகள். இந்த நூலை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த நூல் இத்தனை அழகாகவும் சீக்கிரமாகவும் வெளிவர உதவிய இளம் நண்பர் க.குமரனுக்கும் ஓவியர் புஹாரி அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

*201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி*
*கொழும்பு-13.*

*5.8.97.*

-டொமினிக் ஜீவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியா
13-7-97

அன்பிற்கினிய, எனதருமை நண்பர் டொமினிக் ஜீவா அவர்களுக்கு,

இன்று 13ஆம் திகதி, ஜுலை மாதம்.

இப்படியொரு திகதியில் 51 ஆம் ஆண்டுதான் பிறந்தேன்.

இன்று எனக்கு 46 வயது. இன்றைய திகதியில் நான் எழுதும் முதலாவது கடிதமும் தங்களுக்குத்தான். நினைவிருக்கிறதா?

1972 ஆம் ஆண்டு ஜுலை மாதம். நான் பிறந்த அதே மாதம், அதே திகதியில் தங்களின் மல்லிகை இதழ்- என் வசம் கிட்டியது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஸ்தாபகர் அமரர் பாவலர் துரையப்பா பிள்ளை அவர்களின் படத்தை முகப்போவியமாக்கி மலர்ந்திருந்த பூ மல்லிகை.

அந்த இதழில்தான் எனது முதலாவது சிறுகதை 'கனவுகள் ஆயிரம்' வெளியானது.

'கனவு' -எனத் தலைப்பிட்டுத்தான் அனுப்பினேன்.

தாங்கள்தான் 'கனவுகள் ஆயிரம்' எனப் பெயர் சூட்டினீர்கள்.

நீர்கொழும்பு வாழ் கடலின் மைந்தர்களின் பிரதேச மொழிவழக்கை இலக்கிய உலகிற்கு முதலில் அறிமுகப் படுத்திய கதையென்று தாங்களே புகழாரம் சூட்டினீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை இதழாக அடுத்ததாக மல்லிகை ஆண்டு மலர்; ஆகஸ்ட் இதழ்.

எனது • முகமே பார்த்தறியாத ஒரு அன்பர் அக்கதைக்கு சிறிய விமர்சனக்குறிப்பும் அந்த ஆண்டு மலரில் எழுதியிருந்தார்.

அவர்தான் பின்பு தாமாக என்னிடம் அறிமுகமாகிக் கொண்ட நண்பர் ரத்நஸபாபதி அய்யர்.

தமது விமர்சனக்குறிப்பை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து-நான் வந்தால் அதனை ஒலிபரப்பி, என்னை செவிமடுக்கச் சொல்லவும் என-அன்பர் தம்பையா அண்ணரிடம் வேண்டுகோள் விடுத்துச் சென்றிருந்தார் அய்யர்.

தங்களின் கொழும்பு வருகை அறிந்து பார்ப் பதற்காக ஒரியண்டல் சலூனுக்கு நான் வந்தசமயம் ''நீங்களா முருகபூபதி?''- என அன்போடு உபசரித்து தேநீரும் தருவித்துத்தந்து அந்த ஒலிநாடாவை ஒலிபரப்பி என்னை ஊக்கு வித்த-அன்றுதான் முதல் முதலில் அறிமுகமான தம்பையா அண்ணர்.

என்னை இனம்காணாமல் என் எழுத்தை இனம் கண்டு - அடுத்தடுத்த மாதமே 'புதுயுகம்' வார இதழில் எனது இரண்டாவது கதையை (தரையும் தாரகையும்) பிரசுரித்த நண்பர் மு.கனகராசன்;

''கனவுகள் ஆயிரம்'' வழங்கிய நம்பிக்கையினால் தமது ''பூரணி'' இரண்டாவது இதழிலே மூன்றாவது கதையை (அந்தப்பிறவிகள்) பிரசுரித்த நண்பர் என்.கே.மகாலிங்கம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு கதைகளை மாத்திரமே இலக்கிய உலகிற்கு வழங்கியிருந்த மிகக் குறுகிய காலத்தில் என் கதைகள் பற்றிய விரிவான விமர்சனத்தை தினகரன் வாரமஞ்சரியில் எழுதிய நண்பர் எம்.ஸ்ரீபதி;

இப்படி எத்தனை நண்பர்கள்-

இவர்கள் அனைவருமே மல்லிகையால் எனக்கு கிட்டியவர்கள்தான்.

விரைந்து ஓடிய 25 ஆண்டுகளையும் நினைத்துப் பார்க்கிறேன்.

இந்த இலக்கியவாழ்வில் மல்லிகையின் கொடிக் காலாக வாழக்கிடைத்ததும் பாக்கியம்தான்.

புலம்பெயர்ந்து இந்தக் கண்டத்தில் நான் வாழ்ந் தாலும், உணர்வுகளினால் நாம் ஒன்றிணைந்தே வாழ்கின்றோம்.

'மல்லிகைப் பந்தலின்' வெளியீடாக எனது 'பாட்டி சொன்ன கதைகளை' இலக்கிய உலகிற்கு வழங்கப் பெரிதும் விரும்புகிறேன்.

நன்றி

அன்புடன்
என்றும் உங்கள்
**முருகபூபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வாழ்வனுபவங்களின் பாதிப்பினால் கற்பனையும் கலந்து பதிவு செய்த பல கதைகள்-சிறுகதை இலக்கிய வடிவம் பெற்றதையடுத்து-அவற்றை வாசகர் மத்தியில் உலாவவிட்டு- விமர்சகர்களின் பார்வைகளையும்-கருத்துக்களையும் பெற்றுள்ளேன். பெற்று வருகின்றேன்.

இத்தொகுப்பில் அடங்கும் கதைகளுக்கு உண்மை யிலேயே நான் சொந்தம் கொண்டாட முடியாது.

சின்னஞ்சிறு வயதில் எனதருமைப்பாட்டி என்னை அருகில் அமர்த்தி எனக்குப் புரியும்வகையில் சொல்லித் தந்த கதைகள் இவை.

பாட்டி இன்றும் என் நெஞ்சமதில் வாழ்வது போன்று 'பாட்டி சொன்ன கதைகளும்' மனதில் வாழ்கின்றன. இவற்றைத் 'தமிழன்' வார இதழில் பகிர்ந்து கொண்டேன்.

எங்கள் பாட்டி-அதாவது எமது தாயாரின் அம்மா பெயர் தையலம்மா-

பிரிட்டிஷ் ஆட்சியாளர் காலத்தில் பொலிஸ் சார்ஜண்டாக பணியாற்றி பல வீரதீரச் செயல்கள் புரிந்த கண்ணியமும்-கட்டுப்பாடும்- கடமையுணர்வும் மிளிர்ந்தவருக்கு வாழ்க்கைப்பட்டவர்.

தமது தொழிலில் நேர்மையாக வாழ்ந்து பிரிட்டி ஷாரிடம் வெள்ளிப்பதக்கம் பெற்று புகழ் அடைந்தாலும் தமக்கு வாழ்க்கைப்பட்ட பெண்ணுக்கு எதுவித வாழ்வுப் பாதுகாப்பும் கொடாமல் ஒரு மகளை மட்டும் தந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக்காலம் வரையில் தன்னுடன் வாழப் போகும் மனைவியை பதிவுத்திருமணம் செய்யாமலேயே-நான் 6வயது சிறுவனாக இருக்கும்போது அனைவரிட மிருந்தும் நிரந்தரமாக விடைபெற்றவர்.

இந்த தாத்தாவைத்தான் எனது 'அரசமரம்' கதையில் சித்தரித்திருக்கின்றேன்.

தாத்தாவை பதிவுத் திருமணம் செய்யாதமையால்-சட்டபூர்வமாக அவரது மனைவி என்ற உரிமையை இழந்த எங்கள் பாட்டி; தனது உழைப்பை மாத்திரமே நம்பியவர். ஓய்வு ஊதியம் பெறாதவர்.

உழைப்புக்கு அடுத்தபடியாக தான் தினமும் வணங்கும் முருகனை நம்பியவர்.

எனது பெயருக்கும் பாட்டிதான் பின்னணியோ. என்றும் கருதுகின்றேன்.

தமது அந்திம காலம் வரையில் எமது குடும்பத்தின் உயர்வுக்காக உழைத்து உழைத்து மடிந்தவர் எங்கள் அருமைப்பாட்டி.

கடன் தொல்லைகளினால் எமதில்லம் ஏலம் போகக்கூடிய சூழ்நிலை தோன்றியபோது, அதிகாலை வேளையில் எழுந்து எமது அம்மா சுட்டுத்தரும் தோசை-அவித்துத் தரும் இடியப்பம், பிட்டு முதலான காலை ஆகாரங்களை பெரிய பெட்டியில் வைத்து தலையில் சுமந்து சென்று நீர்கொழும்பு கடற்கரையில் வந்து தவிக்கும் மீனவர் குடும்பங்களின் பசி போக்கி - எமக்கு வருமானம் தேடித் தந்த குலதெய்வம் எங்கள் பாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாட்டியுடன் இணைந்து நானும் இடியப்பம் - தோசை - பிட்டு விற்று வந்து பாடசாலை சென்று பயின்றேன்.

ஏழுவயதிலேயே நான் உழைக்கப் போயிருக்கிறேன் என்பது எனக்கு பெருமையானது.

அந்தப் பிஞ்சு வயதில் என் மனதில் பதிந்த காட்சிகள்தான், நீர்கொழும்பு மீனவ மக்களின் பிரதேச மொழி வழக்குகளை பதிவு செய்த எனது ஆரம்ப கால கதைகள்.

'சுமையின் பங்காளிகள் முதல் தொகுப்பில் அவற்றை பார்க்கலாம்.

நான் எழுத்தாளனாக உருவாவதற்கும் எங்கள் பாட்டிதான் எனக்கு ஆதர்சமாக இருந்திருக்க வேண்டும்.

என் வாழ்வில் நான் எழுதிய முதலாவது கடிதம், இத்தொகுப்பின் கதைகளை எனக்குச் சொல்லித்தந்த எமது அருமை பாட்டிக்குத்தான்.

பாட்டி கடின உழைப்பாளி. அதனால் தன்மான உணர்வும் அதிகம். முன் கோபத்திற்கும் குறையில்லை.

பாட்டிக்கு, அம்மாவுடன் ஏதும் சச்சரவு வந்து விட்டால் கோபித்துக்கொண்டு திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், கோணேஸ்வரம், கதிகாமம் என்று தலயாத்திரை போய்வருவார்கள். போனால் வாரக்கணக்கில் அவர்களைப்பற்றிய தகவல் அறிய முடியாது.

எனினும் நிச்சயம் திரும்பிவருவார்கள் என்ற திடமான நம்பிக்கை எமக்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி அருகில் இல்லாத காலங்களில் அம்மாவுக்கும் அக்காவுக்கும் எனக்கும் வேலை இரட்டிப்பாகிவிடும். இதனால் பாடசாலைக்கும் தாமதமாகச் சென்று 'அடி' வாங்கிய அனுபவங்களும் உண்டு.

தமிழ்ப்பாட 'கொப்பி' எழுதி முடிந்தால் புதிதாக வாங்கப் பணம் இன்றி-எழுதிய கொப்பியை (நல்ல வேளை பென்ஸில் காலம்) இரப்பரினால் அழித்து மீண்டும் அதே பக்கங்களில் புதிய பாடங்களை எழுதிய துயரமான அனுபவங்களும் உண்டு.

கோபித்துக்கொண்டு தலயாத்திரை மேற்கண்ட பாட்டி திடீரென ஒரு நாள் விபூதி பொட்டலங்கள் - உருத்திராட்ச மாலைகள் - கற்பூரச் சட்டிகள் சகிதம் தின்பண்டங்களும் வாங்கிக் கொண்டு பேரப்பிள்ளை களை பார்க்க வருவார்கள்.

மீண்டும் அவர்களின் தலயாத்திரை எப்போது என்று நம்மால் சொல்ல முடியாது.

அம்மாவுடன் 'சச்சரவுகள்' வந்தால் பாட்டி மீண்டும் பயணமாகப் போகிறார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

சில சமயங்களில் தனது மிருதுவான வெள்ளிக் கம்பிகள் போன்ற காட்சிதரும் அழகிய கூந்தலை வெட்டி முற்றாக மழித்து 'மொட்டை' போட்டுக் கொண்டு வந்தும் காட்சி தருவார்கள்.

சுமார் 95 ஆண்டுகள் வரையில் வாழ்ந்து நினைவுகளை நிரந்தரமாக்கி விட்டு மறைந்த எங்கள் பாட்டியை- இத்தொகுப்பில் இடம் பெறும் 'உழைப்பு' கதையில் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பாட்டி நான் பத்துவயது சிறுவனாக இருக்கும்போது - ஒரு கோயில் சத்திரத்திலிருந்து எனக்கு மட்டும் கடிதம் எழுதினார்கள்.

ஏனென்றால் நான்தான் அவர்களின் Good Friend.

பாட்டிக்கு எழுத, வாசிக்கத் தெரியாது. கையொப்பமும் இடத் தெரியாது; கைநாட்டுதான்.

பாட்டி சொல்லச் சொல்ல அந்த கோயில் ஐயர் எழுதிய கடிதம் அது.

நன்றாக, படிக்க வேண்டும், ஒழுக்கமான பிள்ளையாக வளரவேண்டும், தினமும் முருகனை தியானிக்க வேண்டும், குழப்படி செய்யக் கூடாது; அம்மாவுக்கு உதவி செய்யவேண்டும், என்ற வழக்கமான புத்திமதிகளைத் தாங்கிய கடிதம்.

அம்மாவுடன் கோபித்துச் சென்றாலும் 'அம்மா'- தனது அருமை மகள் கஷ்டப்படுவாளே- என்ற கவலை அந்த பெற்ற மனதிற்கு இருக்கத்தான் செய்கிறது.

எனினும் மனவைராக்கியம்-(இதுதான் ஈகோ வா?) தனது மகளுக்கு எழுதாமல் தன் மகள் வயிற்றுப் பேரனுக்கு கடிதம் எழுத வைக்கிறது.

எனது வாழ்வில் எனக்கென்று எனது பெயருக்கு முகவரியிடப்பட்டு வந்த முதற் கடிதம் அதுதான்.

தபால்காரன்-மணியடித்து அழைத்து தந்துவிட்டுப் போன பின்பு- ''பாட்டியின் கடிதம்... பாட்டியின் கடிதம்...''- கடிதத்தை உடைத்துப் பார்க்காமலேயே கூவிக்கொண்டு வீட்டிலும் வெளியிலும் காட்டித்திரிந்தேன், வெகு உற்சாகமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு கடிதத்தை பலமுறை படித்துப்பார்த்து விட்டு பேப்பரும் பென்ஸிலும் எடுத்து பாட்டிக்கு பதில் எழுதினேன்.

எழுதியதை, சரிபிழை பார்க்க அம்மா, அக்காவிடம் காண்பித்தேன்.

''நன்றாக எழுதியிருக்கிறாய்.... பெரிய எழுத்தாளனாகத்தான் வருவாய் போலிருக்கிறது''- என்று அம்மா என் தலை உச்சியில் முகர்ந்து வாழ்த்தினார்கள்.

'அம்மாவின் வாயில் சர்க்கரை போட வேண்டும்.'

எனது முதலாவது Creative Writing பாட்டிக்கு எழுதிய அந்தக் கடிதம்தான்.

இந்தப் பாட்டி, பாட்டி வைத்தியத்திலும் கை தேர்ந்தவர்.

குழந்தைகள் முதல் முதியவர்கள் வரையில் இவரிடம் சிகிச்சைக்கு வந்தவர்களையும் குணமாகிச் சென்றவர்களையும் பார்த்திருக்கிறேன்.

கால் பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் விளையாடி கை, கால்களின் 'உழுக்கு' ஏற்படுத்திக்கொண்டு வந்த பலர் பாட்டியின் சிகிச்சை முறைகளினால் தேறினர்.

இதற்கான ஊதியமாக வெற்றிலை, பாக்கு, புகையிலைதான் அக்காலத்தில் பாட்டி பெற்றார்கள்.

சிலர் பணமும் கொடுப்பார்கள். அதனைச் செலவழிக்காமல் தமது சிறிய 'சம்பிலி'யில் சேமித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலயாத்திரைகளுக்கு பயன்படுத்துவார்கள்.

இவ்விதம் யார் உதவியையும் எதிர்பாராமல் தமது உழைப்பையும் ஆத்ம பலத்தையும் நம்பி வாழ்ந்த எங்கள் பாட்டி எமக்கெல்லாம் முன்னுதாரணம் தான்.

இரவில் உறங்கும் வேளையில் நான் கண்ணயரும் வரையில் என்னருகே படுத்திருந்து எனது தலை மயிர்களை கோதிவிட்டவாறு பாட்டி சொன்ன கதைகள் இவை.

இக்கதைகள் பின்பு கனவிலும் வந்திருக்கின்றன; மனதிலும் பதிந்து கொண்டன.

அப்பதிவு இங்கு பகிரங்கப்படுகிறது

உலகிலே மாறாமல் இருப்பது இயற்கை. இந்த இயற்கையின் இயல்புகளையும் மாற்றிக் கெடுத்து சீரழித்தவன் மனிதன்.

இயற்கையை அழித்து தனது வளத்தைப் பெருக்க முயன்று தானும் அழிந்து கொண்டிருப்பவன் மனிதன்.

இயற்கையுடன் இணைந்து சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருந்த மிருகங்களையும் - பறவைகளையும் - கொன்றழித்து உணவாக்கி உண்டதுடன் நில்லாமல், அவற்றை கூண்டுகளிலும் அடைத்து 'காட்சிப் பொருளாக்கி' பணம் தேடியவன் மனிதன்.

பாடசாலைகளில் ஆரம்ப கல்வி அறிவுக்கும் இந்த வாய்பேசா உயிரினங்களும் இயற்கையும் தான் மெத்தப் பெரிதும் உதவியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து உலகில் முற்றாக அழிந்துவிட்டதாக கூறப்படும். 'டைனோசரஸ்' இன்றைய நவநாகரிக மனிதனுக்கு கோடி கோடியாக பணம் சம்பாதித்துக் கொடுக்கிறது, திரைப்படம் மூலமாக. டைனோசரஸ் மட்டுமா - சிங்கம் - புலி - கரடி - முதலான காட்டு மிருகங்களும் அத்துடன்- ஆடு - மாடு - பூனை - எலி - கோழி - சேவல் - புறா - கிளி - மயில் என்பனவும் 'கார்ட்டூன்' படங்களில் தோன்றி சிறார்களுக்கு விருந்து படைக்கின்றன.

இப்படி விஞ்ஞான தொழில் நுட்பம் வளர்ச்சி யடையாத காலத்தில் எங்கள் பாட்டி கேள்வி ஞானத்தில் எமக்குச் சொன்ன கதைகளை 'உருவகம்' என்ற இலக்கிய வடிவத்தில் சிறைப்படுத்த முனைந்ததன் விளைவுதான் இத் தொகுப்பு.

இக்கதைகளில் வரும் மிருகங்களும் பறவைகளும் மற்றும் உயிரினங்களும் - மரம் - செடி - கொடி - புல் - பூண்டுகளும் பேசுகின்றன. தத்தமக்குத் தெரிந்தவற்றை போதிக்கின்றன. கதையில் நாம் அன்றாடம் சந்திக்கும் அரசியில் - சமூகம் - குடும்பம் - மனிதர்களையும் நாம் இனம்காணமுடியும்.

ஆனால்-இவ்விதம் இனம் காண்பிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பாட்டி இக்கதைகளை எனக்குச் சொல்லித்தரவில்லை

அந்தந்த நேரத்தில் என்னை உறங்கவைக்க - தாலாட்டுப்பாடும் - பருவம் கடந்த பருவத்தில் நான் இருந்தமையால் 'கதை' சொன்னார்கள் பாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி சொன்ன கதைகளை-எனது 'பாஷையில்' மீண்டும் எனது வாசகர்களுக்கு சொல்லியிருக்கிறேன். இவ்விதம் எழுத்துருவம் கொள்வதற்கு முன்பு - எனது பிள்ளைகளுக்கு சொல்லியிருக்கின்றேன். ரிஷிமூலம், நதிமூலம் தெரியாதமை போன்று இக்கதைகளின் சிருஷ்டிகர்த்தா யாரென்று எனக்கும் தெரியாது; எனது பாட்டிக்கும் தெரியாது.

'மூலம்' தெரியாதமையால் 'முடிவும்' தெரியாமல் இக்கதைகள் தொடர்ந்து கொண்டு சாகாவரம் பெற்று வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

இக்கதைகளை எதுவித முன்னறிவிப்பும் இன்றி 'பாரிஸ் தமிழன்' பத்திரிகைக்கு அனுப்பிய வேளையில் மனமுவந்த பிரசுரித்து களம் தந்த 'தமிழன்'ஆசிரியர்- இதுவரையில் நான் முகம் பார்த்தறியாத நண்பர் திரு.எஸ்.கே.காசிலிங்கம். அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

இத்தொகுப்புக்கென அவர் எழுதியுள்ள குறிப்புகளைப் படித்தபோது - என்னை - எனது முதலாவது சிறுகதையிலேயே (1972 இல்) இனம்கண்டு விட்டார் என்பதை அறியும்போது-மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் எனதருமை நண்பர் - மல்லிகை ஆசிரியர் திரு.டொமினிக் ஜீவா அவர்கள்.

'மல்லிகைப்பந்தலின்' நிழலில் யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக அறிமுகவிழா நடந்ததும் எனது முதலாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைத் தொகுதிக்குத்தான் என்ற மனநிறைவும் எனக்குண்டு.

இந்த இலக்கிய உறவு சாசுவதமானது.

'மல்லிகை' மூலம் அறிமுகமாகி 25 ஆண்டுகள் நிறைவெய்தும் இவ்வேளையில் எமது 'பாட்டி சொன்ன கதை'களும் மல்லிகைப்பந்தலின் வெளியீடாக வருவது மிகுந்த மகிழ்ச்சியைத்தருகிறது.

''எனது படைப்புகளை நூலுருவாக்க வேண்டும்''- என்று அடிக்கடி கடிதங்கள் வாயிலாக உறவு தொடரும் அருமை நண்பர் ராஜஸ்ரீகாந்தன் அவர்களுக்கும்,நூலை வெளியிடும் மல்லிகைப் பந்தலுக்கும்-நண்பர் டொமினிக் ஜீவா அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி.

இலக்கியம் என்றும் எம்மை வாழவைக்கும்.

170, HOTHLYN DRIVE
CRAIGIEBURN
VICTORIA 3064.
AUSTRALIA
13-7-97

அன்புடன்

**லெ. முருகபூபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துரை

''எழுத்தாளர்களா, பத்திரிகையாளர்களா உயர்ந் தவர்கள்?''

-இது தேவையற்ற சர்ச்சைதான்.

ஆனாலும், பத்திரிகையாளரும் எழுத்தாளருமான முருகபூபதியைப்பற்றி கருத்துரை எழுதும்போது இந்த சர்ச்சைக்கான விளக்கத்தையும் குறிப்பிடுவதில் தவறில்லை என்று நினைக்கின்றேன்.

பாரிஸில் வாழ்ந்து கொண்டிருந்தபோது அமரராகி விட்ட அகஸ்தியர் அவர்களுடன் ஆரம்பமான சர்ச்சை இது!

''எழுத்தாளர் எல்லோருமே தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பதில்லை. பத்திரிகையாளர்களைப் பொறுத்த மட்டில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இவர்கள்தான் சற்று உயர்ந்தவர்கள்.''

-இது எமது விவாதம்.

''பத்திரிகையாளர்களின் உதவியினால்தான் எழுத் தாளன் பிரபல்யமடைகிறான். பத்திரிகையின் ஒத்தாசை யின்றி எழுத்தாளன் மக்கள் மத்தியில் அறிமுகமாக முடியாது.''

-இதுவும் எமது விவாதம்

''தரமான எழுத்தாளர்களின் படைப்புகளைத் தாங்கி வரும் பத்திரிகைகள்தான் வாசகர் மத்தியில் 'மவுசு' பெறுகிறது. யாருடைய ஆக்கங்கள் வெளிவருகின்றன என்ற கணிப்பை வைத்துத்தான் ஒரு பத்திரிகையின் தரத்தை வாசகர்கள் நிர்ணயிக்கிறார்கள். எனவே பத்திரிகையின் வளர்ச்சிக்கு எழுத்தாளர்களின் பங்கும் அவசியம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-இது அகஸ்தியர்.

அகஸ்தியரைப் பொறுத்தமட்டில், அவர் தமது மூச்சு நிற்கும்வரையில் எழுதிக்கொண்டிருந்தவர். இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர்கூட 'தமிழன்' பத்திரிகையில் அவர் எழுதிவந்த 'மானுட தரிசனங்களின்' கடைசி அத்தியாயம் வெளிவந்திருந்தது. வாழ்நாள் முழுவதும் எழுதிக்கொண்டிருந்த அகஸ்தியரை பொறுத்தமட்டில் பத்திரிகையாளர் தரப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''........ சில எழுத்தாளர்களின் பெயர்களை குறிப்பிட்டு, இவர்கள் எழுதுவது புரிவதில்லை. இதனால் இவர்களின் எழுத்துக்களை நான் படிப்பதில்லை'' என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால், பத்திரிகையாளனாகவும் இருந்துகொண்டு எழுத்தாளனாகவும் திகழ்ந்த-திகழும் படைப்பாளரின் ஆக்கங்கள் எளியமுறையில், படிப்பவர்கள் இலகுவில் புரிந்து கொள்ளத்தக்கதாய் அமைந்திருக்கின்றன என்பதற்கு அமரர் கைலாசபதி, முருகபூபதி, போன்றோரை உதாரணமாக துணிந்து சொல்லமுடியம்.

டொமினிக் ஜீவாவின் கடின உழைப்பால் யாழ்ப்பாணத்தில் மலர்ந்த மல்லிகையில் 1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முருகபூபதி' கனவுகள் ஆயிரம்' என்ற சிறுகதை மூலம் அறிமுகமானபோது நான் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அச்சமயம் துணை இருந்த எஸ்.எம்.கோபாலரத்தினம், வாரமலர் ஆசிரியர் எஸ்.சபாரத்தினம் (சசிபாரதி) வெளிநாட்டு செய்தி ஆசிரியர் எஸ்.பெருமாள் ஆகியோர் முருக பூபதியின் ஆக்கங்கள் வெளிவரும் போதெல்லாம், ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளன் கையாளும் சொற்பிரயோகங்களின் சாயலில் இவரது படைப்புகள் வெளிவருவதை அவதானித்து விட்டு, நிச்சயமாக இவர் ஒரு பத்திரிகை யாளனாகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தோம்.

எமது கணிப்புத் தவறவில்லை.

'வீரகேசரி'யில் அவர் இணைந்ததன் மூலமாக, தான் ஒரு பத்திரிகையாளனும்தான் என்பதை முருகபூபதி நிரூபித்தார்.

வேலை,வீடு,குடும்பம் என்ற ஒரு குறுகிய வட்டத்தினுள் நின்று கொண்டு எழுதி 'எழுத்தாளன்' என்ற பெயரை சம்பாதித்தவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால்,முருகபூபதியை பொறுத்தமட்டில் எழுதத் தொடங்கியது முதல் - அவர் இலங்கை முற்போக்கு எழுத் தாளர் சங்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டது முதல் - இன்று வரையில் தமது இலக்கியப் படைப்பு களில் சமுதாய சீர்திருத்தத் தேடல்களை விதைத்துக் கொண்டிருப்பதை நான் அவதானிக்கின்றேன்.

பாரிஸிலிருந்து வெளிவரும் 'ஈழநாடு' பத்திரிகையில் இவரது ஆக்கங்கள் வெளிவரும் போதெல்லாம் 'தமிழன்' பத்திரிகைக்கும் இவர் ஏன் எழுதுவதில்லை என்று நான் பொறாமைப்படுவதுண்டு. (ஐரோப்பாவிலிருந்து அப்போது வெளிவந்த பத்திரிகைகள் 'ஈழநாடு, தமிழன், மட்டுமே)

அவுஸ்திரேலியாவிலிருக்கும் முருகபூபதியுடன் தொடர்புகொண்டு 'தமிழனுக்கும் எழுதுங்களேன்' என்று கேட்க வேண்டும் என்று நினைத்த சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால், அவருடன் தொடர்பு கொள்ளவில்லை. விரும்பினால் எழுதட்டும்-என்று விட்டுவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள், நான் அடைந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

முருகபூபதியிடமிருந்து ஒருகடிதம்!

அத்துடன் 'பாட்டி சொன்ன கதை' என்ற தலைப் புடன் ஒரு ஆக்கம்.

''தரமானதாயின் 'தமிழன்' பத்திரிகையில் பிரசுரி யுங்கள்.

-இந்த வேண்டுகோளுடன் மட்டும் நிற்கவில்லை -

''அகஸ்தியரின் படைப்புகள் தமிழனில் பிரசுர மாவதால் அதன் தரம் உயர்கிறது''- என்றும் ஒரு குறிப்பு.

சக எழுத்தாளர்களின்- ஏன் சக கலைஞர்களின் ஆக்கங்களை பிரசுரிக்கும் பத்திரிகைகளை பகிஷ்கரிப்புச் செய்யும் மனப்பாங்குடையவர்கள் வாழும் கலை, இலக்கிய உலகில் இப்படியும் ஒரு வித்தியாசமான, நற்பண்புடைய எழுத்தாளரும் இருக்கிறாரா என்று வியந்தேன்.

''பேப்பரும் பேனையும் கற்பனையும் இருந்தால் போதும் எவ்வளவு வேண்டுமானாலும் எழுதித் தள்ளலாம். எழுதியவற்றை பிரசுரிக்கப் பத்திரிகை உலக தொடர்பும் கிடைத்துவிட்டால் எழுத்தாளனாகிவிடலாம்.

'ஒரு எழுத்தாளனின் கடமை அவ்வளவுதானா? வெறுமனே பெயரும் புகழும் தேடுவது மாத்திரம்தானா ஒரு எழுத்தாளனின் வேலை? தானும் சிந்தித்து மற்றவர்களையும் சிந்திக்கச் செய்வதும்தான் அவனது வேலை.'-என்று ஜெயகாந்தன் கூறியதை, அமரர் மு.தளையசிங்கம் பற்றி எழுதும் போது முருகபூபதி குறிப்பிட்டிருப்பதை படித்தேன்.

நமது சமுதாயத்தில் புரையோடிப்போயிருக்கும் வேண்டடத்தகாத பழக்க தோஷங்களை நீக்கவும் அநீதிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலப்படுத்தி அவற்றுக்கு மாற்று வழிகளைக் காண்பிப்பதற்கும் எழுத்தை மாத்திரம் ஆயுதமாக பாவிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், அதற்கு மேலும் செயலூக்கத்துடன் இயங்கி நம்மைச்சார்ந்த சமுதாயத்துக்குத் தேவையான சீர்திருத்த பணிகளிலும் எழுத்தாளர்கள் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்'- என்ற கருத்தை உடையவராக முருகபூபதி திகழ்ந்து கொண்டிருப்பதை அவரது எழுத்துக்களிலும் வாழ்விலும் காண்கின்றேன்.

இதனால் அவரை ஒரு Activist Writer ஆகப் பார்க்கின்றேன்.

''தமிழன்'' பத்திரிகையில் முருகபூபதி எழுதி வந்த' பாட்டி சொன்ன கதைகள்' மூலம் 'தமிழன்' மேலும் செல்வாக்குப் பெறத் தொடங்கியதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். (இதே கருத்தைத்தான் அகஸ்தியரும் கொண்டிருந்தார் என்பதையும் இங்கு நினைவு படுத்துகின்றேன்)

தனித்துவம், பலம், அடக்கம், விதி, மூளை, குணம், உழைப்பு, கறை, சமர்ப்பணம் முதலான தலைப்புகளில் முருகபூபதி அளித்த அறிவுரைகளை, சொல்ல வந்த 'சங்கதி' களைப் பாராட்டி பலர் 'தமிழனுக்கு கடிதங்கள் 'எழுதினார்கள்.

அவர் கையாண்ட சொற்பிரயோகங்கள், சொல்லப் பட்ட விஷயங்கள், சொன்னவிதங்கள் யாவும் வாசகர் களைக் கவர்ந்தன.

''எவரும் எவராகவும் மாற முடியாது. அவரவர் தத்தமது தனித்துவத்தை பேணவேண்டும்; நீயா, நானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு என்ற வாதத்தில் நன்மையும் விளையாது; பகைமைதான் வளரும்''- என தனித்துவத்தில் கூறியிருக்கிறார்.

'மூளை' என்ற உருவத்தில் ஒரு கருமத்தை செய்து முடிக்க தந்திரங்கள் பல சொல்லக்கூடிய 'மூளை' அவசியம் என்பதை சுட்டிக்காட்டி, 'காட்டு ராஜா' சிங்கத்தையே மடக்கக்கூடிய வல்லமை தந்திர புத்தியுள்ள தான நரியிடம் இருந்ததை விளக்கியிருக்கிறார்.

இவ்விதமாக ஒவ்வொரு 'உருவகக்கதை'யிலும்' பல தேடல்களை அவர் விதைத்திருக்கிறார்.

அரசியலையும் சுருக்கமாகவே தொட்டிருந்தாலும் எவரையும் வஞ்சிக்காமல் முருகபூபதி பயன்படுத்திய 'பாணி' மிகவும் சிறப்பானது.

தாயகத்திலிருந்தபோது இலக்கிய அமைப்புகள், இலக்கியப் பணிகளுடன் தமதுவாழ்வை ஒன்றிணைத்திருந்த முருகபூபதி, 1987 இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்து வந்த பின்னரும் எழுதுவதுடன் மட்டும் நின்று விடாமல் சமுதாய பொதுப்பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதற்கு, இவரது ஊக்கத்தி னால் உருவாகிய 'இலங்கை மாணவர் கல்வி நிதியம்' - என்ற அமைப்பு சான்றாகும்.

முருகபூபதியின் இலக்கிய சமுதாய மேம்பாட்டு தொண்டுகள் நீடிக்கவும், அவர் நீடூழிவாழவும் என் ஆசிகள்.

*3-01-97* எஸ்.கே.காசிலிங்கம்
ஆசிரியர்-'தமிழன்'
பாரிஸ்-பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி

அந்தக் காட்டில் ஒரு கிழட்டுச்சிங்கம் நீண்ட காலமாக வசித்தது. வயோதிபம் வந்த போதும் தானே இப்பொழுதும் காட்டுக்கு ராஜா என்ற இறுமாப்புடன் தனது குகையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தது.

சிங்கத்தின் அகம்பாவம் பிடிக்காத ஏனைய மிருகங்கள் தாமுண்டு தம்பாடுண்டு என வாழத்தலைப் பட்டன.

எனினும், எப்பொழுதும் பிரித்தாளும் தந்திரத்தில் கைதேர்ந்த நரி அவ்வப்போது-சிங்கத்தின் குகைக்கு வந்து சுக நலன் விசாரித்துச் செல்லும்.

அவ்விதம் ஒரு நாள் நரி-சிங்கத்தைப் பார்க்க வந்த பொழுது, சிங்கம் ஆழ்ந்த உறக்கத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தது.

அருகே வந்த நரி, தனது கால்களினால் சிங்கத்தை சீண்டி, ''ராஜாவே... நான் நரி வந்திருக்கின்றேன்... '' என்றது.

சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்த சிங்கம், ''என்ன... நீண்டநாட்களுக்கு பிறகு வந்திருக்கிறாய்?... நிறைய செய்திகள் கொண்டு வந்திருப்பாயே?'' என்றது.

''ஓமோம்... சொல்வதற்கு நிறைய இருக்கிறது... நீங்கள் இவ்விதம் எப்பொழுதும் உறங்கிக் கொண்டு ஓய்வு எடுத்துக்கொண்டடிருந்தால்... பெரும் ஆபத் தல்லவா... வரப்போகிறது''- நரி மிகுந்த துடிப்புடன் சொன்னது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆபத்தா?...யாருக்கு...என்ன உளறுகிறாய்?''

சிங்கம் எரிச்சலுற்றது.

''உளறவில்லை சிங்கராஜா....உண்மையைத்தான் சொல்கிறேன்.... நீங்கள்-வயோதிபத்தினால் இங்கே குகைக்குள் முடங்கியிருந்து ஓய்வு எடுத்து உறங்குங்கள்... அங்கே... மற்ற மிருகங்கள் யாவும் தம்தம் இஷ்டம்போல் ஏதோவெல்லாம் செய்து கொண்டு திரியுதுகள். இன்னும் சில நாட்களில் உங்களையே அந்த மிருகங்கள் மறந்து விடலாம்... இந்தக் காட்டின் ராஜா என்ற அந்தஸ்தும் உங்களுக்கு இல்லாமல் போய்விடலாம்.'' நரி மிகவும் விஸ்தாரமாகச் சொன்னது.

''ஓ!... அப்படியா நிலைமை...ஏன் இதனை என்னிடம் இவ்வளவு நாட்களும் சொல்லவில்லை?''சிங்கம் கேட்டது.

''காட்டுக்குள் என்ன நடந்து கொண்டிருக்கிறது... மற்ற மிருகங்கள் என்ன செய்கின்றன... எத்தகைய உணவை சாப்பிடுகின்றன...யார்... யாருடன்.... நட்பாகவும்-பகைமையாகவும் வாழ்கின்றன...முதலான தகவல்களை திரட்டிக் கொண்டிருந்தேன்... சிங்கராஜா''' என்றது நரி.

''அப்படியா...இதுவரையில் உனது திரட்டல்களின் மூலம் என்ன உணர்ந்து கொண்டாய்?'' - சிங்கம் ஆவலுடன் கேட்டது.

''இனிமேல் இந்தக்காட்டில்... உங்களுடைய சர்வாதிகாரம் இல்லாமல் போய்விடலாம்; ஜனநாயகம் மலர்ந்துவிடலாம்... நானே இங்கு தனிக்காட்டுராஜா என்று நீங்கள் கூற முடியாது போகலாம். உங்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இருப்பை' நீங்கள் இழந்துவிடலாம்''-நரி சொல்லச் சொல்ல... சிங்கராஜாவுக்கு ஆவேசம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது.

''நீயுமா... இப்படி சொல்லத் தொடங்கிவிட்டாய்?... நீ... சொல்லவில்லை, எனது வயோதிபமும்-உடல் நலத் தளர்வும் தான் உன்னை இப்படிச் சொல்ல வைக்கிறது... நீ என்ன சொன்னாலும் இந்தக்காட்டுக்கு நான்தான் ராஜா.... என்னை அசைக்க முடியாது. நான்தான் முதல் முதலில் இந்தக்காட்டுக்கு வந்தேன். எனக்குப் பின்பு தான் மற்ற மிருகங்கள் வந்தன. எனக்கு நானே எப்பொழுதோ முடி சூட்டிக் கொண்டுவிட்டேன். அப்படியிருக்க... எனது சர்வ வல்லமையும்-அதிகாரமும் எப்படி என்னை விட்டு போகமுடியும்?. எது சொன்னாலும் அர்த்தமுடன் சொல்...'' சிங்கம் கர்ஜித்தது.

''இந்தக் கர்ஜனை ஒன்றுதான் இன்றும் உங்களிடம்... ஆனால் காரியங்கள் யாவும் மற்ற மிருகங்களிடம்தான்... நீங்கள் இந்த குகைக்குள் முடங்கியிருந்து கர்ஜித்துக் கொள்ளுங்கள். ஆனால் வெளியில் என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?...''- நரி சிங்கத்தை உற்றுப்பார்த்துக் கேட்டது.

''எனக்கு ஒன்றும் தெரியாது...நீதானே காடு, மலை, குளம், குட்டை யெல்லாம் அலைந்து மேய்ந்துவிட்டு வருகிறாய்... உனக்குத் தெரிந்ததை சொல்...''

''ராஜா...என் மதிப்பிற்குரிய பிரபுவே...உங்கள் நன்மைக்காகவே சொல்கின்றேன். எனக்கு இதனால் எந்த ஆதாயமும் இல்லை. உங்களது வயோதிபமும்-அதனால் நீங்கள் எடுத்துக் கொள்ளும் ஓய்வும்-ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகங்களை தம்மிஷ்டம்போல் வாழச் செய்கிறது. அந்த வடக்குத் திசையில் வாழும் புலி தானே அந்த பிரதேசத்தின் ராஜா என்கிறது.

இந்த தெற்குத் திசையில் வாழும் யானை-தானே அங்கு மன்னன் என்கிறது. கிழக்கிலே வாழும் குதிரையோ தனக்குத்தான் அந்தப் பிரதேசம் என்கிறது. மேற்கில் மேய்ந்து திரியும் எருமைமாடு அந்தப் புல்வெளி அனைத்தும் தனக்கே சொந்தம் என்கிறது. மத்தியில் நடமாடும் ஒட்டகம் திட்டமிட்டு தனது இனத்தை அங்கே பெருக்கிக்கொண்டிருக்கிறது. முயல் களும், மான்களும், இருப்பிடம் இன்றி அங்கும் இங்கும் அலைந்து அல்லல்படுகின்றன. காட்டுப் பூனைகள் மாத்திரம் தான் புத்திசாலித்தனமாக இடத்துக்குத் தக்கவாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எப்பொழுதும் இந்த பூனைகள் அப்படித்தான். வீட்டுப் பூனைகள் மதில்மேல் இருப்பது போன்று காட்டுப்பூனைகள் குன்றுகளின் மீது வாசம் செய்கின்றன. இந்த இலட்சணத்தில்...'' 'நான்தான் இந்தக்காட்டின் ராஜா' என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.... சிரிப்புத்தான் வருகிறது''

''சிரிக்காதே... உனது சிரிப்பு எனக்கு சினமூட்டு கிறது...'' சிங்கம் மீண்டும் கர்ஜித்தது.

''சிங்கராஜா... ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பார்கள், ஆத்திரப்பட்டு பயனில்லை. புத்திமான் பலவான். புத்தியை தீட்டினால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காணலாம். இந்த சந்தர்ப்பத்தில் கோபம் துணைசெய்யாது... விவேகம்தான் வேண்டும்'' - நரி நிதானமாக ஆறுதல் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ தான் பெரிய தந்திரசாலியாயிற்றே... இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு உனது 'தந்திரம்' என்ன வழி சொல்கிறது''

''தந்திரம் என்று சொல்லாதீர்கள் ராஜதந்திரம்'' என்று சொல்லுங்கள்.

''சும்மா கிட... நான் தான் ராஜா... அந்த சொல் எனக்கு மட்டும்தான் உரியது... உன்னிடம் இருப்பது தந்திரம்...என்னிடம் இருப்பது ராஜாங்கம்...''

'இப்படிச் சொல்வதில் ஒன்றும் குறைவு இல்லை' - நரி மனதுக்குள் சிங்கத்தை திட்டிக் கொண்டது.

சற்று யோசித்துவிட்டு நரி சொன்னது, ''சிங்கராஜா நல்லதொரு யோசனை உண்டு, சொல்கிறேன். விரும்பினால் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துங்கள். இதுதான் எனது ஆலோசனை:- எல்லா மிருகங்களையும் உங்கள் இருப்பிடத்திற்கு அழைத்து ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். பின்பு கலந்துரையாடுவோம். நீங்கள் தான் இந்தக்காட்டின் ராஜா... என்பதை உணர்த்துவோம். சில சமயம் அதனை அந்த மிருகங்கள் ஏற்றுக் கொள்ளத் தவறினால்... அதற்கும் ஒரு நல்ல யோசனை உண்டு... உங்கள் பிரதேசங்களில் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்...ஆனால்....இந்தக் காட்டின் ராஜா நான் மாத்திரம்தான் என்று நீங்கள் சொல்ல வேண்டும்....'' என்றது நரி.

''இதில் சொல்ல என்ன இருக்கிறது... நான்தான் ராஜா என்பது உலகம் அறிந்த உண்மை தானே.'' சிங்கத்திற்கு மீண்டும் எரிச்சல் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செம்மறி ஆடுகள் சிலசமயம் உங்கள் கூற்றுக்கு 'ஆமாம்' என்று தலையசைக்கலாம், காட்டுப் பூனைகளும் சிலசமயம் உங்களை ஆதரிக்கலாம்... ஆனால் யானை, குதிரை, எருமைமாடு, ஒட்டகம்... என்ன சொல்லுமோ தெரியாது...'' என்றது நரி...

''புலியை விட்டு விட்டாயே...''

''புலிக்குத்தான் அழைப்பில்லையே...''

''என்ன சொல்கிறாய்....எல்லா மிருகங்களும் வந்தால்தானே அந்த சந்திப்பும் - விருந்தும் சிறப்பாக இருக்கும்....புலிக்கு அழைப்பில்லை என்கிறாயே.....''- சிங்கம் வியப்புடன் கேட்டது.

''காரணத்தோடுதான் சொல்கிறேன்...புலி தான் உங்களுக்கு சரிசமமாக வளர்ந்திருக்கிறது. ஏனைய மிருகங்களுடன் ஒப்பிடும் பொழுது அதற்கு தனிப்பலம் இருப்பதும் தெரிகிறது. இந்த விருந்துக்கு புலியை அழைத்தால் உங்களின் தனித்துவம் மறைந்து விடலாம். புலியின் தனித்துவம் எமக்கு வேண்டாம். அதனை தனிமைப்படுத்தவேண்டும். அப்போது தான் உங்களுடைய தனிப்பெரும் பலம் ஏனைய மிருகங்களுக்கு புரியும்.''-என்று ஆலோசனை கூறியது நரி.

நரியின் யோசனை, சரியா, தவறா என்ற மயக்கம் சிங்கத்திற்கு வந்தது.

சிங்கத்தின் மயக்கம் தெளியுமுன்பே நரி உசாரடைந்தது. சிங்கத்தின் மயக்கம் தெளியக்கூடாது என்பதே நரியின் தந்திரம். சிங்கமும் புலியும் பால்ய சிநேகிதர். இரண்டும் இணைந்தால் தனது பிழைப்பு கெட்டுப்போகும் என்ற பயம் நரிக்கிருந்தது. ஆதனால்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விருந்தில் எப்படியும் புலியை வர அனுமதிக்க லாகாது என்று தனக்குள் திடசங்கற்பம் பூண்டது நரி.

நரியின் திட்டம் பலித்தது.

நாளும் குறித்து, சந்திப்புக்கும் விருந்துக்கும் ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்தன.

அனைத்து மிருகங்களுக்கும் அழைப்புகள் அனுப்பப் பட்டன. புலிக்கு மட்டும் இல்லை.

''விருந்திலே.... புலியை ஏன் அழைக்கவில்லை என்று கேட்டால்.... என்ன சொல்வது'' என்று கேட்டது சிங்கம் நரியைப் பார்த்து.

''அதற்கு.... அந்தத்தருணத்தில் என்ன யோசனை உதிக்கிறதோ... அதையே சொல்வோம்... அந்த யோசனைக்கு 'ஆமாம்' சொல்வதற்குக் கொஞ்சம் கூடுதலாக செம்மறி ஆடுகளுக்கு அழைப்பு அனுப்பு வோம்...அவையும் பெரும்பான்மை இனம்தானே?.

விருந்து சிறப்பாக நடந்தது. நரி ஓடி ஆடி வேலை செய்தது. தாவரபட்சணிகளுக்கு தனியாகவும் மாமிச பட்சணிகளுக்கு தனியாகவும் விருந்து தயாராகியிருந்தது.

''சிங்கம் தானே அன்றும் இன்றும்-என்றும் இந்தக் காட்டின் ராஜா'' எனப் பிரகடனப்படுத்திய பொழுது அனைத்து மிருகங்களும் மௌனம் சாதித்தன.

மௌனம் சம்மதத்தின் அறிகுறி - என்று நரியும்- சிங்கமும் புரிந்து கொண்டன.

''இந்த கிழட்டுச் சிங்கம் தனது 'இருப்பை' நிலை நாட்டி ஆறுதல் தேடுவதற்கே தம்மையெல்லாம்

Digitized by Noolaham Foundation.

அழைத்திருக்கிறது எனப்புரிந்துகொண்ட, யானை, குதிரை, எருமைமாடு, ஒட்டகம் என்பன ''விருந்திலே விபரீதம் வேண்டாம்''- என்று மௌனம் சாதித்தன.

விருந்தும் - சிங்கராஜாவின் பிரகடனமும் முடிந்த பின்பு மிருகங்கள் விடைபெற்றன.

நரியும் விடைபெற்றுக் கொள்ள சிங்கத்தின் அருகே வந்து, ''சிங்கராஜா... திருப்திதானே... உங்களது 'இருப்பை' இச்சந்திப்பு நிலைநாட்டிவிட்டது. நானும் விடைபெறுகிறேன்''- என்றது.

என்ன அவசரப்படுகிறாய்?... உன் பேச்சைக் கேட்டு....இப்படியொரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தேன்... எல்லாம்வந்து இங்கு சாப்பிட்டு விட்டு அப்படி அப்படியே போட்டுவிட்டுப் போய்விட்டன எனது வாசஸ்தலத்தை சுத்தப்படுத்துவதில்லையா... எல்லாம் சுத்தப்படுத்திவிட்டு போ.... எனக்கு களைப்பாக இருக்கிறது...நான் மீண்டும் ஒய்வு எடுக்க வேண்டும்'' - என்று சொல்லிவிட்டு தனது இருப்பிடத்திற்கு நகர்ந்து படுத்துக்கொண்டது.

''இதுதான் எனது விதிப்பயனோ?''- என மனம் நொந்து குகையை சுத்தப்படுத்தும் வேலையை நரி ஆரம்பித்தது.

சிங்கம் மீண்டும் குறட்டை ஒலி எழுப்புகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மூளை'

அந்தக் காட்டில் வசித்த குள்ள நரிக்கு தான் குள்ளமாக இருப்பதும் மேலும் உடல்வளர்ச்சியில் உயரமுடியாதிருப்பதும் மிகுந்த கவலையாக மனதை அரித்துக் கொண்டிருந்தது.

தன்னையும் ஏனைய ஜீவராசிகளையும் இறைவன் பாரபட்சமாகவே படைத்துவிட்டான் என்ற கோபமும் குள்ள நரியை பீடித்திருந்தது.

ஒட்டகம் போன்று தன்னால் உயரமாக வளர முடியவில்லையே என்ற ஏக்கமும் நாளும் பொழுதும் அதிகரித்தது.

தனது சக நண்பன் ஓநாயிடம்இந்தக் கவலையை சொன்னபோது - ''ஒட்டகத்தின் மூளையைச் சாப்பிட்டால் அதனைப் போல் உயரமாக வளர முடியும்'' - என்ற ஆலோசனை கிடைத்தது.

ஒட்டகத்தின் மூளையை சாப்பிடுவதாயின்- முதலில் ஒட்டகத்தைக் கொல்லவேண்டும். அது உயரமான மிருகம். குள்ளமான நான் எப்படி அதனுடன் போராடிக் கொல்ல முடியும்'' - நரி தீவிரமாக யோசித்தது.

ஆழ்ந்த யோசனையின் பயனாய் நரி ஒரு தீர்மானத்திற்கு வந்து காட்டின் சிங்கராஜாவிடம் சென்றது.

''சிங்கராஜா உங்களுக்கு நல்ல சுவையான விருந்து படைக்கவிருக்கின்றேன்'' - என்றது நரி.

''அப்படியா.... எந்த மிருகத்தின் இறைச்சி?''- என்று கேட்டதுசிங்கம்.

Digitized by Noolaham Foundation.

''இறைச்சி இல்லை ராஜாவே...மூளை...''

''என்ன...மூளையா? யாருடைய மூளை?'' -சிங்கம் வியப்புடன் கேட்டது.

''ஆமாம்...மூளைதான் ஒட்டகத்தின் மூளை. ஆனால் ஒட்டகத்தை முதலில் கொன்றால்தான் அதன் மூளையை சாப்பிட முடியும். உங்களால் ஒட்டகத்துடன் சண்டை பிடித்து கொல்ல முடியுமா?'' என்று கேட்டதுநரி.

''என்ன...என்னை ஏளனமாக கேட்கின்றாய். நான் எத்தனை மிருகங்களுடன் சண்டையிட்டு வெற்றிபெற்று அவற்றை எனது உணவாக மாற்றியிருக்கிறேன் என்பது தெரியாமல் பேசுகிறாய்... அழைத்து வா... ஒட்டகத்தை... நான் சண்டை பிடித்து காண்பிக்கின்றேன்'''- சிங்கம் கர்ஜித்தது.

நரி சிரித்தது.

''சண்டைக்கு வா... என்றால் ஒட்டகம். வருமா...நாம் எமது மூளையை இவ்விடத்தில் பயன் படுத்த வேண்டும். சிங்கராஜா...சுமுகமாக கதைக்க விரும்புவதாகத்தான் அழைப்பு அனுப்ப வேண்டும். வந்தபின்பு பக்குவமாக நெருங்கி அடித்து வீழ்த்தி அதன் கழுத்தை கடித்துக் குதறி சாகடிக்க வேண்டும்.''- என்று ஆலோசனை கூறியது நரி.

சிங்கமும் ஏற்றுக்கொண்டு, நரியையே ஒட்டகத்தை அழைத்துவர அனுப்பியது.

நரிக்கு குதூகலம். தன்னால் இயலாத காரியத்தை சிங்கத்தின் மூலம் சாதித்த பின்பு- ஒட்டகத்தின் மூளையை சாப்பிடுவதுதான் நரியின் தந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டகத்திடம் சென்று - சிங்கராஜா பார்க்க விரும்புவதாகவும் அழைத்துவருமாறு தன்மூலம் அழைப்பு அனுப்பியிருப்பதாகவும் சொன்னது நரி.

ஒட்டகம் தயங்கியது.

''நான் தாவர பட்சணி. எனது குணத்திற்கும் சிங்கராஜாவின் குணத்திற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. அவருடன் பேசுவதற்கு எனக்கு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே'' - என்றது ஒட்டகம்.

''இருக்கலாம்...ஆனால்....இந்தக்காட்டில் எத்தனையோ மிருகங்கள் இருக்கும்பொழுது உங்களை மாத்திரம் சிங்கராஜா அழைக்கின்றார் என்றால் - அவர் உங்கள் மீது மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறார் என்பது தான் அர்த்தம். எதற்கும்... இந்த அழைப்பை தட்டிக் கழியாமல் ஒரு தடவை போய்த்தான் பாருங்களேன்''- என்று பக்குவமாகக் கூறியதுநரி.

ஒருவாறு ஒட்டகத்தை சம்மதிக்க வைத்து ஒரு நாள் சிங்கத்திடம் அதனை அழைத்துச் சென்று சிங்கத்தின் குகை வாசலில் விட்டுவிட்டு மறைவிடம் ஒன்றில் ஒதுங்கிக் கொண்டது.

குகை வாசலுக்குள் தனது உடலை மிகுந்த சிரமத்துடன் ஒட்டகம் நுழைத்த சமயம் உள்ளேயிருந்த சிங்கம் பாய்ந்து ஓடி வந்து ஒட்டகத்தின் மீது தாவியது.

ஒட்டகம் இந்த எதிர்பாராத அதிர்ச்சியினால் திமிறிக்கொண்டு சிங்கத்தின் பிடியிலிருந்து தப்பி ஓடியது.

மறைவிடத்தில் பதுங்கியிருந்து பார்த்த நரிக்கு மிகுந்த ஏமாற்றமாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.

ஒட்டகம் ஓடியபின்பு சிங்கத்திடம் வந்து சினந்து கொண்டது நரி.

''சிங்கராஜா, உங்கள் அவசர புத்தியினால் ஒட்டகம் ஓடிவிட்டது. அது மிகுந்த சிரமப்பட்டு தலையை நுழைத்து குகையினுள் புகுந்து கொள்ள முனையும் தறுவாயில் நீங்கள் அவசரப்பட்டிருக்கக் கூடாது. அது குகையினுள் நுழைய ஆரம்பித்திருக்க வேண்டும். அவசரப்பட்டு விட்டீர்கள்.'' என்றது நரி.

''நடந்தது.....நடந்துவிட்டது...இனி நடக்கப் போவது பற்றி யோசிப்போம். மீண்டும் சென்று ஒட்டகத்தை அழைத்து வா..'' சிங்கம் கட்டளையிட்டது.

''முதல் முயற்சியே தோல்வி. ஏதோ...மீண்டும் முயற்சி செய்கின்றேன். முடிந்தால் பார்ப்போம் - என்று சொல்லிவிட்டு ஒட்டகத்தை தேடிச் சென்றது நரி.

ஒட்டகத்தின் மூளையை சாப்பிடக்கூடிய அருமையான சந்தர்ப்பம் கைநழுவிப் போய்விட்டதில் நரிக்கு ஆத்திரமும் கவலையும்.

எப்படியும் ஒட்டகத்தின் மூளையை ருசி பார்க்கத்தான் வேண்டும் என்ற ஆவலும் குறையவில்லை. இனி எவ்வாறு அழைப்பு விடுக்கலாம் என்பதையே ஆழமாக யோசித்துக்கொண்டு ஒட்டகத்திடம் சென்றது நரி.

ஒட்டகம் தனது கன்னப்புறத்தில் வழிந்து கொண்டிருந்த இரத்தத்தைக் காட்டி... ''இதோ பார்... உனதுசிங்கராஜா எனக்கு அழைப்பு அனுப்பி கொடுத்துவிட்ட பரிசு'' - என்று சினத்துடன் கூறியது.

நரி ஆறுதல் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிங்கராஜா உங்களை கட்டி அணைத்து முத்தமிடத்தான் முனைந்தார். அதற்குள் நீங்கள் திமிறிய படியால் அவரது கோரமான பற்கள் உங்கள் கன்னத்தை பதம் பார்த்துவிட்டன. நீங்கள் தான் அவசரப்பட்டுவிட்டீர்கள். அணைக்க வந்தவரை உதறித்தள்ளிவிட்டு வந்துவிட்டீர்கள்''- என்றது நரி.

''அவர் அணைக்க வந்தாரா... அழிக்க வந்தாரா...?'' -என்று கேட்டது ஒட்டகம்.

''உங்களுக்கு எப்பொழுதும் கற்பனைதான். அவர் எல்லா மிருகங்களையும் அணைத்து முத்தமிட்ட பின்புதான் பேசத் தொடங்குவார். அது அவர் இயல்பு அதனை முதலில் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தயவு செய்து - நடந்த தவறை பெரிது படுத்தாமல் மீண்டும் தாங்கள் சிங்கராஜாவைப் பார்க்க வர வேண்டும்'' என்றது நரி.

'ஆம். வருகின்றேன்... இதுதான் இறுதி வருகை. இம்முறையும் அவர் மோசமாக நடந்து கொண்டால் மீண்டும் என்னிடம் வராதே... வந்தாலும் நான் உன் முகம் பார்க்க மாட்டேன்... கதைக்க மாட்டேன்.'' ஒட்டகம் கன்னத்தில் வடிந்த இரத்தத்தை நாக்கினால் வருடித் தடவிக் கொண்டே சொன்னது.

''உங்களது கன்னத்துக்காயத்துக்கு பச்சிலை மருந்து வாங்கித் தருகின்றேன். சிங்கராஜாவின் குகைக்கு செல்லும் பாதையில் எனக்குத் தெரிந்த ஒரு முயலிடம் பச்சிலை மருந்து இருக்கிறது...'' என்று பெரிய பொய்யையும் கூறியது நரி.

மீண்டும் ஒரு நாள் குறிக்கப்பட்டது. ஒட்டகத்தின் வருகையை சிங்கத்திடம் ஊர்ஜிதப்படுத்தியது நரி.

Digitized by Noolaham Foundation.

''வரும் வழியில் முயலிடம் பச்சிலை மருந்து வாங்கித்தருவதாக சொல்லித்தான் நாளை அழைத்து வருகின்றேன். குறிப்பிட்ட இடத்தில் நீங்கள் ஒரு மறைவிடத்தில் பதுங்கியிருக்க வேண்டும். ஒட்டகத்தை அங்கு அழைத்து வந்து பச்சிலை மருந்து தடவுவதற்காக அதனை தரையில் அமரச் சொல்வேன். அது அமர்ந்தால் உடனடியாக எழுந்திருக்க மாட்டாது. அச்சமயம் பார்த்து நீங்கள் அதன் மீது பாய்ந்து கழுத்தைக் கடித்துக் குதறி கொலை செய்ய வேண்டும்... அதன் பின்பு நான் உங்களுக்கு அதன் மூளையை எடுத்துத் தருவேன்''- என்று சொன்னது குள்ள நரி.

நரியின் தந்திரத்தை வெகுவாகப் பாராட்டியது சிங்கம்.

சிங்கத்தின் புகழுரையில் நரி நெகிழ்ந்து போனது.

அதே சமயம் - ஒட்டகமோ-சிங்கமோ நரியின் கள்ளத்தனமான தந்திரத்தை புரிந்து கொள்ளவே இல்லை.

திட்டமிட்டவாறு மறுநாள் ஒட்டகத்தை நரி அழைத்து வந்தது.

குறிப்பிட்ட இடத்தில் சிங்கமும் ஒரு மறைவிடத்தில் பதுங்கியவாறு காத்திருந்தது.

அவ்விடத்திற்கு வந்ததும் ஒட்டகத்தை தரையில் அமர்ந்துகொள்ளுமாறு கேட்டதுநரி.

''ஏன்?''- என்று கேட்டது ஒட்டகம்.

''நீங்கள் மிகவும் உயரமானவர். வைத்தியர் முயலுக்கு உங்கள் கன்னப்பகுதி எட்டாது. நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையில் அமர்ந்தால்தான் முயல் உங்கள் கன்னத்தில் பச்சிலை மருந்து தடவமுடியும்'' - என்று காரணம் சொல்லிவிட்டு முயலை அழைத்துவருவதாக பாசாங்கு செய்து புதருக்குள் சென்றது.

ஒட்டகம் முழுமையாக நரியின் பேச்சை நம்பி மிகுந்த சிரமத்துடன் உடலை நெளித்து வளைத்து தரையில் அமர்ந்து கொண்டது.

ஒட்டகம் அமர்ந்ததுதான் தாமதம்-மறைவிடத்தில் பதுங்கியிருந்த சிங்கம் பாய்ந்து வந்து ஒட்டகத்தின் மீது விழுந்து அதனை கடித்துக் குதறியது.

ஒட்டகத்துடன் சண்டையிடுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை, சிங்கத்திற்கு.

ஒட்டகமும் தனது நீண்ட கால்களினால் சிங்கத்தை உதைத்து தள்ளி போராடியது.

எனினும் இறுதியில் சிங்கமே வென்றது.

ஒட்டகத்தின் கழுத்தைக் கடித்துக் குதறியது.

''ஏ... குள்ள நரியே... உனது குணத்தைக் காட்டிவிட்டாய்...''-இதுவே ஒட்டகத்தின் இறுதி மரண ஓலமாய் அமைந்தது.

நீண்ட நேரம் யுத்தம் புரிந்தமையால் சிங்கமும் களைத்து துவண்டது.

நரி அனைத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு-ஒட்டகம் இறந்த பின்பு சிங்கத்தின் அருகே வந்தது.

''சபாஷ்...சிங்கராஜா...நன்றாகத்தான் சண்டையிட்டீர்கள்....யாவும் மறைந்திருந்து கண்டு களித்தேன்''- என்றது நரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த ஒட்டகத்தை வீழ்த்துவது பெரும் பிரயத்தனமாகிவிட்டது. நான் களைத்தப் போனேன். சிறிது ஒய்வு எடுக்க வேண்டும். இனி எனக்குத்தானே அதன் மூளை. நான் குகையில் சற்று ஒய்வு எடுக்கின்றேன். அதுவரையில் நீ இந்தசெத்துப்போன ஒட்டகத்திற்கு காவல் இருந்து கொள்''-என்றுசொல்லி விட்டு குகைக்குள் சென்றது சிங்கம்.

சிங்கம் போகும்வரையில் காத்திருந்த நரி- அதன் பின்பு ஒட்டகத்தின் தலைப்பகுதியை கடித்து உள்ளே இருந்த மூளையை எடுத்து சாப்பிட்டது.

பிறந்த பயனை அடைந்த மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது. ஒட்டகத்தையும் ஏமாற்றியாயிற்று. காட்டுக்கே ராஜாவான சிங்கத்தையும் ஏமாற்றியாயிற்று. எதிர்பார்த்தவாறு ஒட்டகத்தின் மூளையையும் ருசித்து சாப்பிட்டாயிற்று

நரி உற்சாகத்துடன் ஒட்டகத்தை வலம் வந்தது. எனினும் - மீண்டும் சிங்கம் வந்து மூளையைத் தேடினால் என்ன பதில் சொல்வது என்றும் யோசிக்கலாயிற்று.

மின்னலென ஒரு யோசனை நரிக்கு உதயமாயிற்று.

சொற்ப வேளையில்- ஓய்வின் பின்பு சிங்கம் வந்தது.

சோம்பல் முறித்தது.

''ஏ... நரியே... இனித்தான் ஒட்டகத்தின் மூளையைச் சாப்பிடப் போகின்றேன்''- என்று ஆர்ப்பாட்டமாக கர்ஜித்தது சிங்கம்.

நரி மிகவும் நிதானமாகச் சொன்னது:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிங்கராஜா... நாம் இருவருமே ஏமாந்து போனோம். ஒட்டகத்தின் உடலில் அதன் மூளை எங்கே இருக்கிறது என்று தேடிப்பார்த்துவிட்டேன். ஓரிடத்திலும் 'மூளை' இல்லை. ஒட்டகத்திற்கு உண்மையிலேயே 'மூளை' இல்லைத்தான். மூளை இருந்திருந்தால் - முதல் தடவை உங்களிடமிருந்து தப்பித்துச் சென்ற ஒட்டகம் மீண்டும் உங்களை நம்பி - திரும்பியும் வந்திருக்குமா? அதற்கு மூளையே இல்லை.''

''மூளை இல்லாத ஒட்டகத்துடனா இவ்வளவு நேரமும் நான் சண்டையிட்டேன்'' என்று கேட்டது சிங்கம்.

''அதற்காக உங்களுக்கும் மூளை இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடாதீர்கள் சிங்கராஜா... மூளை இருந்தமையால் நீங்கள் அதன் மூளையை சாப்பிடுவதற்கு சண்டையிட்டு முயன்றீர்கள்... ஆனால் மூளையே இல்லாத ஒட்டகம்-மீண்டும் மீண்டும் உங்களை நம்பி வந்தது. அதற்கு மூளையே இல்லை!'' என்று குறும்பாக சிரித்தது குள்ள நரி.

நரியின் வயிற்றுக்குள் ஒட்டகத்தின் மூளை அப்பொழுது சமிபாடாகிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணம்

அந்த அமைதியான நகரத்தினை சேவல் கூவி துயில் எழுப்பும். புள்ளினங்கள் இராகம் இசைக்கும் அந்நகரத்து கோயில் மணியோசை நாதமெழுப்பும்.

நகரை ஊடறுத்துச்செல்லும் சிற்றாறு நகரைப் போன்றே அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும். அந்நகரில் பிறந்தவர்கள்- வாழ்பவர்கள் பாக்கிய சாலிகள்.

'வந்தோரை வாழ வைக்கும் சிங்கார நகரம்' என்ற பெருமையையும் தேடிக் கொண்ட பிரதேசம் அது.

அங்கு ஒரு செல்வந்தர். பரம்பரை பணக்காரர். பணம் அந்தக் குடும்பத்திற்கு பல வழிகளிலும் வந்தது. அந்நகருக்கு பெரியவராய் - மதிப்பிற்குரியவராய் அந்தச் செல்வந்தர் வாழ்கிறார்.

ஒரு நாள் அயலூரிலிருந்து ஒரு பிரமுகர் அவர் வீட்டிற்கு விருந்தினராக வந்து - மாளிகைபோன்ற அந்த வீட்டையும் அமைதியான அந்த நகரத்தையும் பார்த்து வியப்படைகிறார்.

அந்நகரில் அசம்பாவிதங்களோ - திருட்டுச் சம்பவங்களோ நடைபெற்றதில்லையென அறிந்து ஆச்சரியமடைகிறார்.

அந்தப் பிரமுகருக்கு அவரையறியாமலே -அடிமனதில் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிக்கிறது.

''பரம்பரை பரம்பரையாக தேடிய செல்வத்திற்கு பாதுகாப்பும் வேண்டும்'' என்று உபதேசம் செய்ய ஆரம்பிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமுகரின் கூற்றை ஆட்சேபித்து மறுதலிக்கின்றார் செல்வந்தர்.

''இந்நகரில் பல ஆண்டுகளாக வாழ்கிறோம். எந்தப் பிரச்சினையும் வரவில்லை. எமது மூதாதையர் தேடிய சொத்துக்களுக்கு ஆபத்தும் வரவில்லை. இந்த ஊர் மக்களுக்கு நாமும் உதவுகிறோம். அவர்களும் எம்மை நன்கு மதிக்கிறார்கள். என்னையும் எனது குடும்பத்தையும் இந்நகரத்து உத்தம மக்களே பாதுகாப்பார்கள்.'' என்று நகரத்தின் அமைதியையும் பெருமையையும் வலியுறுத்துகிறார் செல்வந்தர்.

''ஆயினும்...காலம் மாறிக்கொண்டிருக்கிறது. யாரும் யாரையும் நம்ப முடியாத காலம் வரப்போகிறது. மக்கள் மத்தியில் சுயநலம் படிப்படியாக தலை தூக்குகிறது. இந்நகரத்து மக்களினால் உங்களுக்கும்- உங்கள் சொத்துக்களுக்கும் ஆபத்தில்லாமல் இருக்கலாம். ஆனால் அயலூர் திருடர்களால் எச்சமயமும் உங்கள் செல்வம் திருடப்படலாம் அல்லவா?'' - என்று கரிசனையுடன் எச்சரிக்கை விடுத்தார் அந்தப் பிரமுகர்.

பிரமுகரின் கருத்திலும் நியாயம் இருப்பதாக உணர்ந்தார் அந்த செல்வந்தர்.

''அப்படியானால்... என்ன செய்யலாம்.. நீங்களே நல்ல யோசனை சொல்லுங்கள்''-கேட்டார் செல்வந்தர்.

சொன்னார் பிரமுகர்.

பிரமுகரின் ஆலோசனைப் பிரகாரம் அடுத்த வாரமே அந்தச் செல்வந்தரின் மாளிகை போன்ற வீட்டை காவல் காப்பதற்கு ஒரு நாய் வந்துசேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அல்ஷேசன் இனத்தைச் சேர்ந்த உயர்ந்த பருமனான நாய்.

நாய்க்கென வீட்டின் பின்புற வளவில் தனியாக மரக்கூண்டு. தனியாக விசேட உணவு. அதனைப் பராமரிக்க ஒரு வேலைக்காரன்.

அந்த நாய் சுதந்திரமாக வீட்டின் உள்ளும் புறமும் திரிந்தது.

அறிமுகமற்ற முகங்களை கண்டால் குரைக்கத் தொடங்கியது.

இப்பொழுது அந்நகரத்தில் காலையில் சேவல் கூவினாலும்- புள்ளினங்கள் இராகம் இசைத்தாலும்- கோயில் மணி நாதமெழுப்பினாலும் நாயின் குரைப்புச் சத்தமே மக்களுக்கு கேட்கின்றது.

அந்த நாயின் வருகையால் அந்த செல்வந்தர் வீட்டுக்கு மக்களின் வருகை குறைந்தது.

நாயைக் கண்டு மக்கள் பயந்தார்கள். வீட்டுக்கு வரும் மக்களைப் பார்த்து நாய் குரைக்கிறது.

நாயின் குரைப்புச்சத்தம் சில சமயங்களில் செல்வந்தரின் அமைதியையும் குலைத்தது. நித்திரையை குழப்பியது.

'இந்த நாய் தேவைதானா' என்றும் யோசித்தார். திருடர் பயம் கவலையும் தந்தது.

நாட் செல்ல- நாயின் குரைப்புச்சத்தம் அவருக்குப் பழகிவிட்டது. ஆனால் ஊர் பொதுமக்களின் பழக்கம் அவருக்கு குறைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கும் அந்த ஊருக்கும் இடையே அந்த நாய் ஒரு மதிலாகவே வளர்ந்துவிட்டது.

அந்த நாயின் குரைப்புச்சத்தத்தையும் செல்வந்தரின் எதிர்பாராத கொட்டத்தையும் அடக்குவதற்காக- அயல் வீட்டுக்காரனும்-அடுத்த ஊரிலிருந்து ஒரு நாயைக் கொண்டு வந்து வளர்க்கத் தொடங்கினான்.

அந்த நாயும் வாட்டசாட்டமாக வளர்ந்திருந்தது. ஆனால் உயர்ந்த அல்சேஷன் ரகம் இல்லையென்பதால் செல்வந்தருக்கு ஆறுதல். தன்னிடமே உயர்ந்த இனத்து நாய் இருப்பதாக தம்பட்டம் அடிக்கத் தொடங்கினார்.

அந்த ஊரின் அமைதியை குலைத்தது அந்த இரண்டு நாய்களின் குரைப்புச் சத்தம்.

அந்த நாய்கள் உரத்த குரலில் குரைத்தாலும் அவரவர் எஜமானர்களுக்கு நன்றியுடனும் விசுவாசத்துடனுமே வாழ்ந்தன.

வீட்டை காவல் காப்பதற்குத்தான் நாய் தேவை என்ற மரபு மாறி நாய் வளர்ப்பதும் புதுவகையான நாகரீகம் என்ற மரபு தோன்றியது அந்த நகரத்தில்.

பலரும் நாய் வளர்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

வீட்டுக்கு ஒரு நாய் வந்துவிட்டது. ஒருவர் வீட்டுக்கு ஒருவர் செல்லப் பயந்தனர்.

அவரவர் தத்தம் நாய்களின் பெருமையை தத்தமக்குள் பேசி ஆறுதலடைந்தனர்.

காலை முதல் இரவு வரையில்-சில சமயங்களில்-ஒரு முழு நாள் பொழுதுமே அந்நகரில் நாய்களின் குரைப்புச் சத்தமே கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் செல்வந்தர் தமது உயர்ந்த ரக அல்சேஷன் நாயுடன் தெருவில் இறங்கி உலாவச் சென்றார்.

இந்த நாயைப் பார்த்ததும் வீதியோரத்து வீடுகளி லிருந்த எல்லா நாய்களும் குரைக்கத் தொடங்கின.

தாமும்- அந்த நாயைப்போன்று வெளியில் உலாவச் செல்ல வேண்டும் என்று அடம் பிடித்தன.

எல்லா நாய்களும் வீதிக்கு வந்து விட்டன.

இரண்டு கால் மனிதர்கள் நாலுகால் மிருகங்களுடன் உலாவச் செல்கின்றனர். அனைவர் வசமும் நாய் இருந்தது. நாய்கள் குரைக்கின்றன. ஒன்றையொன்று முறைக்கின்றன. எஜமானர்களின் பிடியிலிருந்து நழுவிச் சென்று ஒன்றையொன்று கடிக்கின்றன. பிய்த்து பிறாண்டுகின்றன.

அந்த நகரம் அமைதி இழந்தது.

ஒரு சேவல் அருகே நின்ற கோழியிடம் சொன்னது:-

''நாய் நன்றியுள்ள மிருகம்தான்... ஆனால் பல நாய்கள் சேர்ந்தால் இப்படித்தான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவம்

தொழுவத்தில் கட்டப்பட்டிருந்த பசுவுக்கு மிகுந்த மனக்கவலை.

மேய்ச்சலுக்காக புல்வெளிக்கு தான் அழைத்துச் செல்லப்படுவதைத்தவிர இந்தத் தொழுவத்திலேயே அடைபட்டுக்கிடப்பது நெஞ்சில் சோகமாக அடைத்தது.

அந்த வீட்டை காவல்காக்கும் நாயோ சுதந்திரமாக திரிந்தது.

எந்நேரமும் தொழுவத்தில் கட்டுண்டுகிடக்கும் பசுவை ஏறிட்டுப்பார்த்து குரைத்தது நாய்.

''ஏன் குரைக்கிறாய்.... உனக்கென்ன குறை'' -என்று கேட்டது பசு.

''உன்னைப்பார்க்க பரிதாபமாக இருக்கிறது அதனால் குரைத்தேன்''-நாய் மீண்டும் குரைத்தது.

பசுவுக்கு எரிச்சலூட்டும் பதில் இது. ''நான் மிகவும் புனிதமான பிராணி. என்னை கோமாதா என்றும் அழைப்பார்கள். எனது பாலை கோயில்களில் அபிஷேகத்திற்கும் எடுக்கிறார்கள் - எனது சாணம் கோமயம் என்ற புனிதப்பொருளாக ஏற்கப்படுகிறது. எனது சாணம் ஏழைமக்களின் குடிசைகளில் தரையும்-அடுப்பும் மெழுகுவதற்கு பயன்படுகிறது. பல வழிகளில் நான் அனைத்து மக்களுக்கும் பயன் படுகின்றேன். இந்தப் பெருமைகள் உனக்கு இல்லை நாயே-'' என்று சொன்னது பசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவின் கூற்றில் பல உண்மைகள் இருந்த போதிலும் அதனை ஜீரணிக்க முடியாமல் நாய் தனது பக்கத்து நியாயங்களை சொன்னது.

''எத்தகைய பயன் உன்னால் மக்களுக்கு கிட்டியபோதிலும் ஒரு அடிமை போன்று எப்பொழுதும் தொழுவத்தில் கட்டுண்டு கிடக்கின்றாய். என்னைப் பார்...நான் பூரண சுதந்திரத்துடன் ஓடி ஆடி நடமாடுகின்றேன். ஏதோ உன்னை புனிதமாக மக்கள் கொண்டாடுவதாக சொல்கிறாய். என்னையும் மக்கள் வணங்குகிறார்கள் என்ற உண்மையை மறந்து விட்டாயே...'' - நாய் வாலை ஆட்டிக் கொண்டது.

''உனது வாலாட்டத்தை நிறுத்தி விட்டு அந்த உண்மையை சொல் பார்க்கலாம்.''-என்றது பசு.

''நான் வைரவர் சுவாமிக்கு வாகனமாக இருக்கின்றேன். அனைத்து கோயில்களிலும் வைரவர் சிலை நாய்வாகனத்துடன் இருப்பதை நீ அறியமாட்டாயா? மக்கள் வைரவர் சுவாமியை வணங்கும்போது என்னையும் சேர்த்துத்தான் வணங்குகிறார்கள் என்ற பேருண்மையை மறந்துவிடாதே. அதுமட்டுமல்ல நான் வீரமுள்ள காவல்காரன். வீடுகளை காப்பவன்- நன்றியுள்ள மிருகம் எனப் பெயர் பெற்றவன். மோப்ப சக்தி உள்ளவன். பல திருடர்களையும் குற்றச்செயல்களையும் கண்டு பிடிக்க காவல்துறைக்கு உதவுபவன். உன்னைவிட என்னால்தான நாட்டுக்கும் மக்களுக்கும் பயன் அதிகம்''-நாய் மிகவும் இறுமாப்புடன் வாதம் புரிந்தது.

பசுவுக்கு சிரிப்புவந்தது.

''நன்றி மறந்தவர்களை-'நன்றி கெட்ட நாய்'-என்று தான் அழைக்கிறார்கள். இந்த உண்மை உனக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியுமா- எலும்புத்துண்டை யார் தந்தாலும் ஓடிப்போய் எடுத்துக்கொள்வாய். உனது விசுவாசத்தையும் மாற்றிக்கொள்ளப்பார்ப்பாய். உனது இனத்தைச் சேர்ந்த வேறு ஒரு நாயைக் கண்டால் குரைத்து உனது பலத்தை நிரூபிக்க முயல்வாய். ஆனால் நான் அப்படியல்ல, பசித்தால் புல்லும் புண்ணாக்கும்தான் உண்பேன். உன்னைப் போன்று உயிரினங்களையும்-அவற்றின் கழிவுகளையும் சாப்பிடமாட்டேன். பலவகையில் உன்னைவிட நான் உயர்ந்த பிராணி. புனிதமான ஜீவராசி'' பசு தலையை ஆட்டி கழுத்தில் கட்டிய மணியால் ஓசை எழுப்பியது.

''என்ன... பெரிய புனிதம். உனது புனிதத்தை நீதான் மெச்சிக்கொள்ள வேண்டும். உன்னை வெட்டிக்கொன்று இறைச்சியாக உண்ணும் மக்களும் இருக்கிறார்கள். உனது தோலை பாதணி செய்யவும் - வாகன ஆசனங்களுக்கும் - பயன்படுத்துகிறார்கள். உன்னை புனிதமாக நினைப்பவர்களே- உனது தோலில் செருப்புத்தைத்துக் கொள்கிறார்கள். உனது புனிதமான தோலில் செய்யப்பட்டது என்பதற்காக வீட்டுக்குள்ளும் கோயிலுக்குள்ளும் அந்தச் செருப்பை கொண்டு போகிறார்களா, யாரை ஏமாற்றுகிறாய்.... நீ உயிருடன் இருக்கும்வரையும் தான் உனது புனிதம் பேசப்படும்-நீ இறந்துவிட்டால் - புதைப்பார்கள் அல்லது உண்பார்கள்' - நாய் ஆக்ரோஷமாக எதிர்வாதம் புரிந்தது.

இரண்டு பிராணிகளும் விதண்டாவாதம் புரிந்து களைத்துவிட்டன. சொற்ப வேளையில் அந்த வீட்டின் எஜமானி வந்து பசுவுக்கு புண்ணாக்கு கலந்த தண்ணீரும் - நாய்க்கு மாமிசம் கலந்த உணவும் வைத்துச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பிராணிகளுக்கும் அகோரப் பசி. தத்தம் பாட்டில் அமைதியாக உணவை அருந்தின

இந்த இரண்டு மிருகங்களினதும் வாய்த்தர்க்கத்தை அமைதியாக அவதானித்துக் கொண்டிருந்த கோழி சிந்தித்தது.

நாய் புண்ணாக்கு உண்ணாது. பசுவோ மாமிசம் புசிக்காது. உணவிலும் ருசியிலுமே இவ்வாறு பேதம் இருக்கும்போது- ஏன் தத்தம் வாழ்க்கை முறைகளின் வேறுபாட்டை இவை இரண்டும் புரிந்துகொள்ள தவறிவிடுகின்றன. யாரும் யாராகவும் மாறிவிடமுடியாது. அவரவர் தத்தம் தனித்துவம் பேணுவதுதான் பெருமை- நீயா நானா உயர்வு என்ற வாதத்தில் எந்த நன்மையும் விளையாது- பகைமைதான் வளரும். இந்த உண்மையை இந்த இரண்டு மிருகங்களுக்கும் சொன்னால் புரிந்து கொள்ளுமா?

பசுவும்-நாயும் உண்டு முடியும் வரையில், தான் யோசித்ததை சொல்வதற்காக காத்திருந்தது கோழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலம்

அந்த வீட்டில் வாழ்ந்த எலிகளுக்கு பூனையின் வரவு ஆபத்தாகிவிட்டது.

சுதந்திரமாக ஓடித்திரிந்து தானியங்கள் உண்டு களித்து வாழ்ந்த எலிகள், புதிதாக குடியேறிய பூனையால் நிம்மதி இழந்தன.

பூனைக்கு எந்த வீட்டிலும் பாலும் உணவும் வேளா வேளைக்கு தாராளமாகவே கிடைத்தன.

ஆனால்-எலிகளோ - தமக்குத் தேவையானதை ஒளிந்தும்- பதுங்கியும் மிகுந்த விழிப்போடும் தேடியலைந்து சேகரித்து உண்டன.

அந்த வீடு கட்டப்பட்ட நாள் முதலாய் வாழ்ந்து சந்ததியும் பெருக்கிகொண்ட எலிகளுக்கு புதிதாக குடியேறிய பூனை எதிரியாகிவிட்டது.

இந்த எலிகளை ஒழித்துக்கட்டுவதற்காகவே அந்த வீட்டுக்காரர் பூனையை கொண்டு வந்து வளர்க்கிறார்.

அந்தப்பூனை சகல சௌபாக்கியங்களும் பெற்று வீட்டின் நிரந்தர அங்கத்தவன் போன்று வாழத்தலைப் பட்டதைக் கண்டு- எலிகளுக்கு வெஞ்சினம் மூண்டது.

தமது இனத்தை பூண்டோடு அழிக்க வந்த பூனையை எந்த வழியிலாயினும் கொன்றுவிட வேண்டும்; இல்லையேல் விடிவே இல்லை என்ற முடிவுக்கு எலிகள் வந்துவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு பூனையை கொலை செய்யலாம் என்பதையிட்டு எலிகள் இரகசியமாக தமது பொந்துகளில் கூடி ஆலோசனை மேற் கொண்டன.

ஒரு நாள்-இரண்டு நாட்கள் அல்ல; பல நாட்கள் யோசித்தும் தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாமல் தவித்தன எலிகள்.

இறுதியில் ஒரு எலி தனது ஆலோசனையைக் கூறியது.

''அயலூரில் பெருச்சாளி என்ற எம்மைப்போன்ற ஆனால் பூனையளவு பருமனான பெரிய எலி வாழ்கிறது. அதனை அழைந்துவந்தால் பூனையுடன் மோதவிட்டு பூனையை கொன்றுவிட்டு, அதன் பிறகு நாம் சுதந்திரமாக வாழ முடியும்.''

இந்த யோசனைப் பிரகாரம் பெருச்சாளி வரவழைக்கப்பட்டது.

பெருச்சாளி பூனையை கொல்வதற்கு தான் தயாராயிருப்பதாயும்- ஆனால் அதற்கு முன்பு சில நிபந்தனைகளை எலிகளுக்கு விதிப்பதாயும் கூறியது.

''என்ன நிபந்தனை?''

எலிகள் கேட்டன.

''நிபந்தனை ஒன்று:- என்னை உங்கள் தலைவனாக்க வேண்டும்''.

நிபந்தனை இரண்டு:- நீங்கள் திருடிச் சேகரிக்கும் தானியங்களில் கணிசமான பங்கு எனக்கு தரப்பட வேண்டும்.

நிபந்தனை மூன்று:- பூனையை நான் கொன்றழித்த பின்பும் நான் இந்த வீட்டில் தான் தங்குவேன்'' இதுவே பெருச்சாளி முன்வைத்த நிபந்தனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிகளுக்கு மிகவும் தர்மசங்கடமாகி விட்டது.

முதல் இரண்டு நிபந்தனைகளையும் ஏற்கலாம்; மூன்றாவது நிபந்தனைதான் பாரதூரமானது. பெருச்சாளியை வரவழைத்தது- பூனையை கொல்வதற்காகத்தான். அந்த வேலை முடிந்து விட்டால் பெருச்சாளி திரும்பிப் போய்விட வேண்டியதுதானே.

பூனையை கொல்வதற்கு சன்மானமாக-அதனை தற்காலிகமாக தலைவனாக்குகிறோம். அதுமாத்திரமின்றி தானியங்களும் கொடுக்க சம்மதிக்கின்றோம். இது போதாதா? இங்கு நிரந்தரமாகவே குடியிருக்கவும் வேண்டுமா?- எலிகள் தமக்குள் மிகவும் தீவிரமாக யோசித்தன.

முடிவில்-முதல் இரண்டு நிபந்தனைகளையும் ஏற்பதெனவும்-பூனையை பெருச்சாளி கொன்ற பின்பு இங்கிருந்து போய்விட வேண்டும் என்றும் ஏகமனதாக தெரிவித்தன.

பெருச்சாளிக்கு-எலிகள் முடிவு ஏமாற்றத்தையே அறித்தது.

அதன் எதிர்பார்ப்பு வேறுவிதமாக இருந்ததே அதற்குக் காரணம்.

பூனையை கொலை செய்யும் சாட்டில்-எலிகள் உபசரணைகளுடன் தொடர்ந்து சௌகரியமாக-சும்மா இருந்து உண்டு கொழுக்கலாம் என்ற நம்பிக்கையுடன். தான் அந்தப் பெருச்சாளி அங்கே வந்தது.

எலிகளின் கோரிக்கைப் பிரகாரம் பூனையை கொன்றுவிட்டால்- தனது எதிர்பார்ப்பு விரைவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவிடும் என்ற கவலை பெருச்சாளியை அரிக்கத் தொடங்கியது.

அப்படியானால் என்ன செய்யலாம்? பெருச்சாளியும் தீவிரமாக யோசித்தது.

பின்பு- அதுவும் தனக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்தது. அந்த உள்நோக்கத்தை வெளியிடாமல், ''சரி... உங்கள் எண்ணப்படியே -பூனையை நான் கொன்றதும்- மறுகணமே போய்விடுகின்றேன். ஆனால்- அது வரையில்-நானே உங்கள் தலைவன்.

எனக்கு தானியங்கள் சேகரித்து தரவேண்டும். உபசரணைகள் செய்யவேண்டும். ஏன் இன்னும் பூனையுடன் மோதவில்லை. அதனைக் கொல்லவில்லை -ஏன் இந்தத் தாமதம் என்றெல்லாம் என்னை வந்து நச்சரித்துக் கொண்டிருக்கக் கூடாது. முதலில் நீங்கள் தரும் தானியங்களை உண்டு - உடலில் வலிமை தேடவேண்டும். அதன் பின்பு-தருணம் பார்க்க வேண்டும். சில சமயங்களில் இதற்கு, சில நாட்களாகலாம். சம்மதமா?''- எனக் கேட்டது-அந்த தந்திரசாலியான பெருச்சாளி.

எலிகளும்-தமக்கு வேறு வழிதெரியாமல் சம்மதித்தன.

அன்றுமுதல்-எலிகள் தாம் மிகவும் சிரமப்பட்டு தேடிய தானியங்களில் ஒரு பகுதியை அந்த பெருச்சாளிக்கு தானமாக கொடுத்தன. அதற்கு தேவைப்பட்ட உபசரணைகளையும் வழங்கின.

பெருச்சாளி பூரண சுக தேகியாக நாளும் பொழுதும் உண்டு கொழுத்து-நடமாடித் திரியமுடியாமல் சோம்பிக் கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் பூனையின் அட்டகாசமும் அதிகரித்தது.

எலிகள்-பூனையிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பெரும் பிரயத்தனப்பட்டுக் கொண்டே- தமக்கும் அந்தப் பெருச்சாளிக்கும் தானியம் தேடித் கொண்டிருந்தன.

பெருச்சாளி-பூனையுடன் சண்டையிடுவதற்கோ-அல்லது வேறு வழிகளில் அதனைக் கொல்வதற்கோ எந்தவொரு முயற்சியும் மேற் கொள்ளாமல்-காலத்தை வீண்போக்கிக் கொண்டிருந்தது.

எலிகள் பொறுமை இழந்தன. பெருச்சாளியின் போக்கு எலிகளுக்கு புதிராகியது.

உண்மையிலேயே அதற்கு உருவம்தான் பெரிதா-சும்மா இருந்து உண்டு கொழுப்பதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாதா- பூனையிடம் இருந்து தம்மைப்பாதுகாப்பதாகச் சொல்லி வந்த பெருச்சாளி-அதற்கு ஏற்ற வழிவகைகளை நாடாமல் தம்மைச் சுரண்டிக் கொழுப்பதாக சிந்திக்கத் தொடங்கின.

இந்த நிலைமைகளை மிகவும் பொறுமையுடன் அவதானித்துக் கொண்டிருந்தது ஒரு சுண்டெலி.

எனினும்-தனது கருத்தை எலிகள் ஏற்றுக்கொள்ளுமா-கவனத்தில் கொள்ளுமா என்ற சந்தேகமும் தோன்றியது.

ஆயினும்-மனதில் பட்டதை சட்டெனச் சொல்லி விட வேண்டும். இல்லையேல் - காலம்பூராவும் - இந்த எலிகள் அந்த எங்கிருந்தோ வந்த அந்நியப் பெருச்சாளிக்கு சேவகம் செய்து கொண்டுதானிருக்குமே தவிர வேறு ஒன்றும் உருப்படியாக நிறைவேறப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்டெலி பொறுமை இழந்து சத்தம் போட்டது.

''ஒரு எதிரியை அழிப்பதற்கு-ஒரு சுரண்டல்காரன் தேவையா- பெருச்சாளியின் குணம் உங்களுக்குத் தெரியாதா? அது இங்கே எமது எதிரியான பூனையுடன் சண்டைபிடித்து அதனைக் கொல்ல வரவில்லை. பூனையை கொல்லும் சாட்டில்- சும்மா இருந்து எம்மைச் சுரண்டிக் கொழுத்து வாழ்வதற்குத்தான் வந்துள்ளது. ஏமாந்து விடாதீர்கள்'' என எச்சரிக்கை செய்தது சிறிய சுண்டெலி.

''ஏய் சும்மா கிட..... உனக்கென்ன தெரியும். நீ சிறியவன். உனக்கு அனுபவம் போதாது. நாம் பெரியவர்கள் எமக்குத் தெரியும்.''-என்றது ஒரு எலி.

''சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும் என்பார்கள் மறந்துவிடாதீர்கள்''- என்றது சுண்டெலி.

''சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்றும் சொல்வார்கள் - இதனையும் மறக்காதே சுண்டெலி''-என்றன மற்ற எலிகள்.

''நமது எதிரியை நாம்தான் அழிக்க வேண்டும். அயலானை அழைக்க கூடாது.

அயலானிடம் போகவும் கூடாது. நாம் ஒற்றுமையாக·செயல்பட்டால்- பூனையை அழிக்கமுடியும் முதலில் எம்மை நாம் உணர்வோம். எமது பலத்தை அறிவோம். எங்கள் பொது எதிரியை வீழ்த்துவதற்கு சகல முனைகளையும் பாதுகாப்போம். ஆளுக்கு ஒவ்வொரு திசையையும் - முனையையும் பொறுப் பெடுப்போம். எல்லோரும் ஓரிடத்திலேயே நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பூனையை அழிக்க காத்திராமல்-நான்கு திசைகளையும் கவனித்து பொறுப்புகளையும் திசை களையும் கவனித்து பொறுப்புகளை பகிர்ந்து கொடுத்து எதிரியை வீழ்த்தத் தயாராகுவோம்.'' என்றது சுண்டெலி.

''அப்படியானால் பெருச்சாளி-?''

''அதனை முதலில் துரத்துவோம். அது எமக்கு வேண்டாம். ஏனென்றால் அது பூனையை கொல்ல வரவில்லை. எம்மை சுரண்டத்தான் வந்தது. சுரண்டிக் கொழுத்த பின்பு பூனையுடன் சமரசம் செய்து கொள்ளும். அதனால் முதலில் பெருச்சாளியை வெளியேற்ற முயலுவோம். அதே சமயம் பூனையை அழிக்கவும் தயாராகுவோம்.''

நீண்ட யோசனையின் பின்னர் எலிகள்-சிறிய சுண்டெலியின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கம்

கடலோரக் கிராமத்தில் வாழ்ந்த கோழி தனது கூட்டைவிட்டு வெளியே வந்து மேய்ந்து கொண்டிருந்தது.

அதே சமயம் கடலில் வாழ்ந்த ஆமையும் கடலைவிட்டு கரையேறி கோழியிடம் வந்தது.

''என்ன ஆமையாரே....இந்தப் பக்கம்'' என்று கேட்டது கோழி.

''ஒன்றுமில்லை-சும்மா-உன்னைப் பார்த்துப் பேசிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்''என்றது ஆமை.

நீங்கள்தான் அடிக்கடி என்னைப் பார்க்க இந்தக் கரைக்கு-கடல் கடந்து வருகிறீர்கள். ஆனால் என்னால்-உங்களைப்பார்த்துப் பேசுவதற்கு- இந்தக் கடலுக்குள் வர முடியவில்லை ஆமையாரே....'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னது கோழி.

''என்ன செய்வது...அதுதான் இறைவன் படைப்பின் மகத்துவம். இறைவன் சில உயிரினங்களை நீரில் வாழவும் சிலதை நிலத்தில் வாழவும் என்னைப் போன்றவற்றை நீரிலும் நிலத்திலும் வாழவும் படைத்திருக்கிறான் அவன் படைப்பு விசித்திரமானது. அதற்காக வருந்தாதே... நேரம் கிடைக்கும் சமயங்களில் நானே உன்னை வந்து பார்க்கிறேன்.''-ஆமை ஆறுதல் கூறியது.

கடலின் புதினங்களை கேட்டறிய கோழி ஆவல் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமையும் கரையின் சமாச்சாரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டியது.

''இது பரந்த கடல், நாட்டுக்கு நாடு தேசத்திற்கு தேசம்-இதன் பெயர் மாறு படுகிறது. பெயரில்தான் மாற்றம். ஆனால் அதன் ருசியில் மாற்றம் இல்லை யாவும் உப்புநீர்தான்.இந்த பரந்த கடலின் கரைகளில் உள்ள நாடுகள் கடல் எல்லைகளை வகுத்துள்ளன. இறைவன் படைத்தான் - மனிதன் ஆளுகின்றான்.'' ஆமை தத்துவம் பேசியது.

''ஆமாம்.... இந்த கரையிலும் எல்லைகளை வகுத்த மனிதன் - அது உன் பிரதேசம் இது என் பிரதேசம் என்று போராடிக்கொண்டிருக்கிறான். இவ்வாறு எல்லைப் போராட்டம் மேற் கொண்ட போதிலும்- எந்த எல்லையிலிருந்து வந்தாலும் எம்மை கொன்றழித்து தனது உணவாக்கிக் கொள்கிறான். நாம் இடும் முட்டைகள் எங்கிருந்து வருகின்றன என பார்ப்பதில்லை. விவாதிக்கும்போது முதலில் கோழி வந்ததா - அல்லது முட்டை வந்ததா? என்று சண்டையும் பிடிப்பான் மனிதன்.''- கோழி தனக்குத் தெரிந்த தத்துவங்களை சொல்லத் தொடங்கியது.

''கோழியே உனக்கு ஒரு விடயம் தெரியுமா - எங்கள் ஆமை இனத்திற்காக இந்த மக்கள் சட்டமே இயற்றியிருக்கிறார்கள். எம்மை கடலில் பிடிக்கக் கூடாது.... கொல்லக்கூடாது என்று சட்டம் தயாரித்துள்ளார்கள். எமது இனத்தைப் பாதுகாக்க இப்படியொரு சட்டம் இயற்றிய மனிதர்கள் - உனது இனத்தைப் பாதுகாக்க எந்தவொரு நடவடிக்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்காமல் உனது இனத்தை தமது உணவுத் தேவைக்காக அழித்து வருகிறார்களே''- என்று கவலையுடன் கேட்டது ஆமை.

''பல விடயங்கள் தெரிந்த உங்களுக்கு இந்த சின்ன விடயம் புரியவில்லையா- எமது இனம் அழியாது. அதனால்தான் எம்மை பாதுகாக்க சட்டம் இயற்றவில்லை. ஆனால் உங்களது ஆமை இனம் அழிந்துவிடலாம் என்ற அச்சம் இந்த மனிதர்களுக்கும் அவர்கள் உருவாக்கிய அரசுகளுக்கும் உண்டு. அதனால் உங்களைப் பாதுகாக்க சட்டம் இயற்றியுள்ளார்கள்.'' என்றது கோழி.

''உண்மைதான் ஆனால் சட்டத்தின் பிடியில் சிக்காமல் எம்மைப் பிடித்து கொன்று எமது இறைச்சியை விற்பனை செய்யும் கடற்தொழிலாளர்களும் வர்த்தகர்களும் இருக்கிறார்கள். தப்பித்தவறி பிடிப்பட்டு விட்டால் லஞ்சம் தொடுத்து தப்பித்துக் கொள்கிறார்கள். சட்டம் ஒரு கழுதை,'' - ஆமையின் கூற்றிலும் நியாயம் இருப்பதாக உணர்ந்தது, கோழி. அதேவேளை - ஆமைக்கிருக்கும் மவுசை எண்ணிப் பொறாமைப் பட்டது.

இன்று இந்த ஆமையுடன் கதைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நாளையோ அல்லது இன்னும் சொற்ப நேரத்திலோ நான் உயிர் வாழ்வேனா என்ற நிச்சயமற்ற வாழ்க்கை தானே வாழ்கிறேன்.

நான் வாழும் வீட்டுக்கு விருந்தினர் எவரேனும் திடீரென வந்து விட்டால் அவர்களுக்கு விருந்தாவதற்காக நான் கொல்லப்படலாம். எந்தக் கணமும் எனது உயிர்க்கு ஆபத்துண்டு ஆனால் ஆமைக்கு அப்படியல்ல தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய நேரத்தில் கரைக்கு வந்து மீண்டும் தனது இருப்பிடம் செல்கிறது.

கோழியின் மௌனத்தை கலைத்தது ஆமை.

''என்ன கோழி திடீர் யோசனை, ஏதாவது பேசேன்'' - என்றது ஆமை.

''ஒன்று மில்லை... எனக்கு முக்கியமான வேலை ஒன்றுண்டு. வீட்டுக்குப் போய் வர வேண்டும்.'' கோழி அவசரப்பட்டது.

''என்ன அவசரம் .... எனக்கும் சொல்லேன்'' ஆமை ஆவலுடன் கேட்டது.

''நான் இன்று முட்டை இடும் நேரம் வந்து விட்டது.... போய் முட்டையை இட்ட பின்பு மீண்டும் வருகிறேன். அதுவரையில் இங்கேயே இருங்கள்'' என்று சொல்லிவிட்டு கோழி வேகமாக விரைந்தது.

சிறிது நேரத்தில் உரத்த குரலில் கொக்கரித்துக் கொண்டு வந்து சேர்ந்தது.

ஆமையிடம் வந்த பின்பும் அதன் ''கொக்கரக்கோ'' சத்தம் நிற்கவில்லை.

''நான் ஒரு முட்டை இட்டு விட்டேன்''-என்று சொல்லிச் சொல்லிஆமையை சுற்றிச் சுற்றி வந்து கொக்கரித்தது கோழி.

ஆமைக்கு - கோழியின் போக்கு விநோதமாக இருந்தது. நான் பல முட்டைகள் இட்ட போதிலும் எப்போதும் போல் அமைதியாகத்தானே இருக்கிறேன். ஏன் இந்தக் கோழி மாத்திரம் ஒரே ஒரு முட்டையை இட்டுவிட்டு இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமை-சிறிது நேரம் அமைதியாக கோழியின் ஆர்ப்பாட்டத்தை அவதானித்து அமைதியாக அதன் கொக்கரிப்பைக் கேட்டது.

பின்பு, தான் நினைத்ததை சொல்லி விட்டு மீண்டும் கடலுக்குள் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம்

அரசமரத்தடி பிள்ளையாருக்கு கோயில் கட்டியெழுப்புவதற்கு ஊர்பொது மக்கள் தீர்மானித்து. அதற்கான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார்கள்

அரசமரத்துக்கருகில் கோயில் நிர்மாணத்துக்காக செங்கற்கள் மற்றும் மரங்கள்- கட்டிடப் பொருட்கள் வந்து குவியத் தொடங்கின.

கோயில் நிர்மாணப்பணிகளில் ஈடுபடும் ஸ்தபதிகளும் - கூலிவேலையாட்களும் மும்முரமாக வேலைகளை ஆரம்பித்தனர்.

கோயிலுக்கான அத்திவாரம், விசேட பூசை ஆராதனையுடன் ஆரம்பமானது.

அத்திவாரத்துக்கான கற்களை ஸ்தபதிகளின் பணிப்பின் பிரகாரம் கூலியாட்கள் வேறாக தரம் பிரித்து அடுக்கி வைத்தனர்.

அமே சமயம் - கோபுரக்கலசத்தை தாங்குவதற்கென விசேட கவனிப்புடன் தருவிக்கப்பட்ட கற்கள் பிரத்தியேகமாக ஒரு புறத்தில் அடுக்கப்பட்டன.

கோபுரக்கலசத்தை தாங்கும் கற்கள் மிகவும் இறுமாப்புடன் அங்கு அமர்ந்து - அத்திவாரத்துள் அடுக்கி சீமெந்து பூசப்படும் கற்களை ஏளனத்துடன். பார்த்துச் சிரித்தன.

''என்ன... சிரிக்கிறீர்கள்... நாம் இந்த அத்திவாரக் கிடங்குகளுக்குள் சமாதியாகின்றோம்- அதைப்பார்க்க உங்களுக்கு சிரிப்புவருகிறதோ?''- ஒரு அத்திவாரக் கல் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எமது இனத்தவர்களான உங்களைப்பார்க்க தற்பொழுது - எமக்கு சிரிப்பு மட்டுமல்ல பரிதாபமும் தோன்றுகிறது. எமது ஆழ்ந்த அனுதாபங்கள்''- என்றன கோபுரக்கலசக் கற்கள்.

''போதும் உங்கள் அனுதாப வார்த்தைகள். ஆடு நனைவதைப்பார்த்து ஓநாய் அழுத கதைதான். நாம் வலிமையானவர்கள். எமது பலத்தில் தங்கித்தான் இந்தக் கோயிலே எழும்பவிருக்கிறது. ஆனால் நீங்களோ பலவீனமானவர்கள். எம்மீது எழுப்பப்படும் கோயிலின் கோபுரத்தில் சின்னஞ்சிறு கலசம் தாங்கும் கல்லாக மேலேறி அமரப்போகிறீர்கள். உம்மையும் நாம் தான் தாங்கப் போகிறோம் என்பதை மறவாதீர்கள்''- அத்திவாரக் கிடங்குகளிலிருந்து கற்கள் கோஷமெழுப்பின.

கோபுரக்கலசக் கற்களுக்கு கோபம் பீறிட்டது.

''கீழே - மண்ணில் வீழ்ந்தாலும் மண்ணுள் தாண்டுபோனாலும் உங்கள் அகம்பாவம் உங்களை விட்டு அகலமாட்டாது. மண்ணுக்குள்ளே நீங்கள் அத்திவாரமாக புதைந்து போய்விடுவீர்கள். அதன் பின்பு கோயில் கட்டிடம் உங்களுக்கு மேலே எழுந்து விடும். பொது மக்களின் கண்களுக்கும் தென்படாமல் போய்விடுவீர்கள். ஆனால் - என்றென்றும் மக்களின் கண்களுக்கு காட்சி தரும் கற்களாக - கோபுரக்கலசத்தை தாங்கும் கற்களாக நிமிர்ந்து நிற்கப்போவது நாங்கள் தான் - கோபுரக்கலசக் கற்கள் பெருமிதமாகப் பேசின.

இந்தப்பேச்சு மிகவும் அற்பத்தனமாகப்பட்டது அத்திவாரக் கற்களுக்கு.

ஆயினும் - அற்பத்தனத்தை அம்பலப்படுத்தாதுவிடின் - அற்பத்தனமே அற்புதமாகிவிடும் அபாயம் தோன்றலாம். என்று சிந்தித்தன! அத்திவாரக் கற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் சிந்தனையை தவறாக புரிந்து கொண்டு ''என்ன மௌனமாகிவிட்டீர்கள்... உங்கள் மீது சாந்து பூசி உங்கள் வாய்களை அடைத்து விட்டார்களா இந்தத் தொழிலாளர்கள்?'' ஒரு கோபுரக்கலசக் கல் கேட்டது.

''எம் இனத்திலே தோன்றி - வெவ்வேறு இடங்களில் வாழத்தலைப்பட்டாலும் - நாம் ஓரினம் என்ற உன்னத குணம் வேண்டும் எம்மை அத்திவாரக் கற்கள் - கே ாபுரக்கலசக்கற்கள் என தரம் பிரித்தவர்கள் இந்த மனிதர்கள். அவர்களின் தேவைக்காக - இந்த அரசமரத்தடி பிள்ளையாருக்கு கோயில் எழுப்புவதற்காக எம்மை தரம் பிரித்தார்கள். அந்தப் பிள்ளையாரும் எமது இனம் தான். அவர் கருங்கல் - நாம் செங்கல் - நாம் புதைக்கவும் கட்டவும் பயன்படுகிறோம். அவர் வணங்கப் படுகிறார். அவ்வளவுதான் வித்தியாசம்.'' - தத்துவ மழை பொழிந்துவிட்டதாக கருதியது ஒரு அத்திவாரக்கல்.

''முட்டாள் தனமாகப் பேசாதே- உனது விதிப்பயன் அத்திவாரத்துள் முடங்கப் போகிறாய்- அந்த கருங்கல்லின் பிறவிப் பெரும் பயன் - பிள்ளையார் உருவம் எடுத்து கோயிலுக்குள் - நானோகோபுரக் கலசத்தை தாங்கு வதற்காக மேலே உயரத்தில் அமரப்போகின்றேன். எதற்கும் பலன் வேண்டும்.'' என்று சொன்னது கோபுரக் கலசக்கல்.

இரண்டு தரப்பினதும் வாதப்பிரதி வாதங்களை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தது அந்த நிழல் பரப்பும் அரசமரம்.

தனது நிழலில் அமர்ந்திருக்கும் பிள்ளையாரிடம் அரசமரம் சொன்னது:- என்ன பிள்ளையாரே... பேசாமல் இருக்கிறீர்,அந்தக் கற்களின் விதண்டாவாதங்களை கேட்டீரா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் அப்பொழுதும் எதுவும் பேசாமல் மௌனம் அனுட்டித்தார்.

''ஓ... சில வேளை - இவர் இல்லாதபொழுது வாயைத் திறந்தால் ... நீரும் எமது இனம் தான் - யாரோ ஒரு சிற்பியினால் சிலையாகி விட்டீர் என்று இந்த கற்கள் கேட்டு விடுமோ என்ற எண்ணத்தில்தான் மௌனித்துப் போனாரோ''- என்று யோசித்தது அரசமரம்.

இதே வேளை - அத்திவாரக்கற்களுக்கும் கோபுரக் கலசக் கற்களுக்கும் இடையே தர்க்கம் தொடர்ந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் என்று தீர்மானித்த அரசமரம்.....

காற்றிலே தனது கிளைகளை அசைத்து சலசலத்து கற்களை சாந்தப்படுத்தியது .

அத்திவாரக்கற்களையும் கோபுரக்கற்களையும் கோபுரக்கலசக்கற்களையும் மிருதுவாகத் தீண்டியது, அரசமரத்தின் அசைவினால் எழுந்த இதமான காற்று.

''எனதருமைக் கற்களே - ஏன் உங்களுக்கிடையே இப்படியொரு பேதம்- பேதமை. மனிதர்கள் கோயிலின் தேவைகருதி உங்களை இங்கு தருவித்தார்கள். இதுவரை காலமும் எனது நிழலில் வாழ்ந்த பிள்ளையாருக்கு கோயில் அமைக்க நீங்கள் அனைவரும் பயன்படப் போகிறீர்கள். அதற்காக முதலில் பெருமைப்படுங்கள், மகிழ்ச்சியடையுங்கள்'' என்றது அரசமரம்.

''ஆமாம்... பெருமைதான் ஆனால் அந்தப் பெருமை அனைத்தும் எம்மையே சார்ந்துள்ளது'' - என்றது கோபுரக்கலசக்கற்கள்.

''ஏன் அப்படி சிந்திக்கிறீர்கள்?'' எனக் கேட்டது. அரசமரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உண்மைதானே நாம் தானே இந்த உலகின் கண்களுக்கு தெரியப்போகின்றோம். ஆனால் - அத்திவாரக்கற்கள் வெளியே தெரியாமல் பூமிக்குள் புதையுண்டு போய்விடும் தானே.'' என்றன கோபுரக் கலசக்கற்கள்.

அரசமரம் சிறிது நேரம் மௌனம் அனுட்டித்த பின்பு சொன்னது, ''நான் ஒரு விருட்சமாக எழுந்து நிழல் பரப்புகிறேன். என்னை தாங்கிக் கொண்டு இந்த பூமியில் புதையுண்டிருப்பது வேர்கள். மக்களின் பார்வைக்கு நான் தென்பட்டாலும் மக்கள் பார்வைக்குபடாமல் பூமியில் புதையுண்டுள்ள பேர்கள் இல்லையேல் நானும் இல்லை. எனது நிழலும் இல்லை. அதுபோன்று தான் இந்தக்கோயிலின் அத்திவாரமும். கோபுரக் கலசக்கற்களே - ஒன்றை புரிந்து கொள்ளுங்கள். உங்களால் அந்தரத்தில் மேலே நிற்க முடியாது. உங்களையும் கலசத்தையும் கோயிலையும் முழுமையாக தாங்கிக் கொண்டு பூமிக்குள் மௌனமாக இருப்பவை இந்த அத்திவாரக்கற்கள்தான். அத்திவாரம் இல்லையேல்... எதுவுமே இல்லை. வேரில் தங்கியிருப்பது மரம்; அத்திவாரத்தில் தங்கி நிற்பது கட்டிடம்''

அரசமரத்தின் தெளிவான பதில் கண்டு மௌனம் கலைந்தார் பிள்ளையார்.

''அரசமரமே... நீ வெறும் மரம் அல்ல... ஞானம் நிரம்பிய மரம். உனது நிழலில் வாழ்ந்ததை பெருமையாக நினைக்கிறேன்''-என்றார் பிள்ளையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

மணம் பரப்பும் மலர்கள் பூத்துக்குலுங்கும் நந்தவனத்தில், பார்ப்பவர்களின் மனதைக் கவரும் மல்லிகைப்பந்தல்.

அதனருகே பல்வேறு வண்ணங்களில் பூக்கும் ரோஜா செடிகள்.

மல்லிகையோ தூய வெள்ளை.

ரோஜாவே-பல நிறங்களில்.

ரோஸ்-இளஞ்சிவப்பு-சிவப்பு-மஞ்சள் வெளிர்மஞ்சள்-வெள்ளை.....இப்படி பல வண்ணம்.

மல்லிகைப்பூவுக்கு இறுமாப்பு. தான் எப்பொழுதும் தூயவெண்மையுடன் பளிச்சிடுவதாக சொல்லிக்கொண்டது.

''உனது குணமறிந்துதான் இறைவன் உன்னை அவ்வாறு படைத்தான்''-என்றது ரோஜா.

''என்னிடத்தில் அப்படி என்ன குணம் கண்டுவிட்டாய்- நான் தூய்மையானவள். அதனால் வெண்மையாக இருக்கிறேன். ஆனால் நீயோ மாரீச குணம் கொண்டவள். பல நிறங்களில் பூக்கின்றாய். உன்னை புஷ்பிக்கும் செடியும் முட்கள் நிரம்பியவை'' -மல்லிகையும் ரோஜாவை சீண்டியது.

''என்னை பறிக்கவருபவர்களுக்கு அது எச்சரிக்கை; ஆனால் உனக்கோ பாதுகாப்பே இல்லை. உனது கொடியை உலுக்கினால் பொல பொலவென உதிர்ந்து விடுவாய். உனக்கும் எனக்கும் இடையே நிலவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாட்டையாவது உணர்ந்து கொள்.''- ரோஜா ஏளனமாக சிரித்தது.

மல்லிகைக்கு உடனடியாக எதுவும் சொல்லத் தோன்றாமல் சிறிதுநேரம் மௌனமாகியது.

''என்ன...ஊமையாகிவிட்டாய். நான் சொல்வது சரிதானே....?''-ரோஜா, தனது நியாயத்தை மீண்டும் வலியுறுத்தியது.

''மௌனம் என்றால் சம்மதம் என்று அர்த்தப் படுத்திக் கொள்ளாதே. சிந்திப்பதற்காகவும் மௌனம் அவசியமானது. மல்லிகை மக்களை பெரிதும் கவர்ந்த மலர். பெண்கள் என்னை தமது கூந்தலில் சூடிக் கொள்வார்கள். நான் இந்த நந்தவனத்தில் மாத்திரம் மணம் பரப்பவில்லை - மாதர்களின் கூந்தலிலும்-இறைவன் சந்நிதானத்திலும் மணம் பரப்புகின்றேன். என்னை வாசனைத் திரவியங்களுக்கும் பயன்படுத்து கிறார்கள். நான் இலக்கியங்களிலும் பேசப்படுகிறேன். இந்தச்சிறப்புகள் உனக்கு இல்லைத்தானே.''-

மல்லிகை மௌனமாக,சிந்தித்தவற்றை உதிர்த்து விட்டு ரோஜாவை ஏறிட்டுப்பார்த்தது.

இதைக்கேட்டு ரோஜா குலுங்கிக்குலுங்கி சிரித்தது.

''உனது அறியாமைக்காக வெட்கப்படுகிறேன்.... -தமிழர்கள் வாழும் கீழைத்தேய நாடுகளில் உனக்கு அத்தகைய சிறப்புகள் இருக்கலாம். மேற்கத்தைய நாடுகளுக்குப் போய்ப்பார். எனக்குள்ள மகிமை கண்டு நீ விக்கித்துப் போவாய். இளம் காதலர்களுக்கு மட்டு மல்லாது அனைவருக்கும் அன்பைப் பரிமாறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் இதயபூர்வமான தூதுவனாக ரோஜா திகழுகிறது. ஏதோ உன்னை மாத்திரம்தான் மக்கள் தமது வாசனைத் திரவியங்களுக்காக நாடுகிறார்கள் என்று மாத்திரம் சொல்லி உனது அறியாமையை பறைசாற்றாதே. மேல் நாடுகளில் அழகு சாதனப் பொருட்களுக்கு நானும் உதவுகின்றேன். ரோஜா மலர் கண்காட்சிகள் நடக்கும் செய்திகள் அறியமாட்டாய். மல்லிகை மலர், கண்காட்சிக்கு போவதில்லை-ஏன் தெரியுமா நீ ஒரே நிறம்தான். நானோ பல்வேறு வண்ணங்களில் பூக்கின்றேன். உருவத்திலும் பல்வேறு வடிவங்கள்.'' என்றது ரோஜா.

''முரண்பாடுகளின் மொத்த உருவமாகப் பேசுகிறாயே. உன்னைப்பறிக்க வருபவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்குத்தான், நீ மலரும் செடிகளில் முட்கள் இருப்பதாகச் சொல்கிறாய். பிறகு.... கண்காட்சி.. அது.... இது என்று ஏதோ பிதற்றுகிறாயே.'' மல்லிகை ரோஜாவின் முட்களையே மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியது.

மல்லிகையும் ரோஜாவும் முடிவின்றி வாதம் புரிந்து கொண்டிருந்ததைப் பார்த்த செவ்வரத்தம் பூ சொன்னது:- ''அதோ... பாருங்கள் உங்களையும் என்னையும் பறித்துச் செல்ல கோயில் பண்டாரம் வருகிறார். நாம்-எமது மரம்-செடி-கொடிகளில் வாழப்போவது இன்னும் சொற்ப நேரம்தான். எம்மையெல்லாம் பறித்துச் சென்று மாலையாகவும்-எமது இதழ்களை இறுக்கிக் கட்டி சரங்களாகவும் மாற்றிகோயில் சந்நிதானத்திற்கு கொடுப்பார் இந்தப் பண்டாரம்.அவரது வாழ்க்கையே எம்மால்தான் ஓடுகிறது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வரத்தம் பூ சொன்னதை செவிமடுத்த ரோஜா சொன்னது, ''எனது செடியின் முட்கள் அந்தப் பண்டாரத்தை பலதடவைகள் பதம் பார்த்துள்ளன. எனது எதிர்ப்பை அப்படியாவது காட்டிக் கொண்டிருக்கின்றேன். ஆனால் நீயும் மல்லிகையும் என்ன செய்கிறீர்கள். அந்தப்பண்டாரத்தின் கைகளுக்குள் இலகுவாக சிக்குண்டு அவர் சுமந்துவரும் பூக்கூடையில் மரணித்தும் போகிறீர்கள்.:''

பண்டாரம் இந்த மரம் - செடி - கொடிகளுக்கு அருகில் வந்துவிடுகிறார்.

அவரது கரங்கள் இயந்திரமாக இயங்குகின்றன.

பூக்களை பறிக்கின்றார் கூடையினுள் போடுகிறார்.

அனைத்து பூக்களும் கூடையினுள் ஒன்றின்மேல் ஒன்றாக விழுகின்றன.

வெவ்வேறு மரம்-செடி-கொடிகளில் பூத்துக்குலுங்கி மணம் பரப்பிய அந்த அழகிய மலர்கள் இப்பொழுது ஒரு கூடையினுள் நெருங்கியவாறு மூச்சுவிட முடியாமல் அவதியுற்றன.

மல்லிகையும்-ரோஜாவும்-செவ்வரத்தம் பூ சொன்ன உண்மையின் ஆழ்ந்த அர்த்தத்தை புரிந்து கொண்டன.

''நீ... சொன்னதுதான் சரி. நாம் பல இனத்தவர்கள்தான். ஆனால்- நாமனைவரும் மலர்கள். நாம் இந்த. மனிதர்களுக்குத் தேவை. எம்மை மலரவைப்பதற்காக எமது மரம்-செடி-கொடிகளை உரமிட்டும்-நீரூற்றியும் வளர்ப்பார்கள். நாம் மலர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு ஈவிரக்கமின்றி பறித்துச் செல்வார்கள். நாம் மலரப்பிறந்தோம். அவர்களோ பறிக்கப் பிறந்தவர்கள்.'' -என்றது மல்லிகை.

மல்லிகையின் கருத்தை ரோஜாவும் ஆமோதித்தது.

இந்த மலர்களை சுமந்து வந்த கூடைக்குள் மலர்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

''மலர்களே- நீங்கள் மென்மையானவர்கள். உங்கள் வேதனை புரிகிறது. நீங்கள் மலரும் செடி,மரம்,கொடிகளில் தொடர்ந்து நீடித்து இருப்பதில் பலன் இல்லை. எப்படியோ உதிர்ந்து நிலத்தில் விழுந்து விடுவீர்கள். அத்துடன் உங்கள் ஆயுள் முற்றுப் பெற்றுவிடும். ஆனால்-மலர்களின் கடமை மலர் வதுடன் மட்டும் நின்று விடுவதில்லை. மலர்கள் சூடப்பட வேண்டியவை. மலர்களின் பெருமையே அதுதான். உங்களுக்கு மரணம் இல்லை. மீண்டும் மீண்டும் மலர்ந்து கொண்டே இருப்பீர்கள். மலர்ந்து- மரம்-செடி-கொடிகளிலிருந்து உதிர்ந்த மண்ணோடு மண்ணாகிவிடாமல் - மற்றவர்களுக்கு பயன்படுகிறீர்களே- அதுவே-உங்களை பெருமைப் படுத்துகின்றது. எனவே கவலை வேண்டாம். இப்பொழுது நீங்கள் மாலையாக கோயிலுக்குள் சென்று இறைவனை அலங்கரிப்பீர்கள். மக்கள் இறைவனை மட்டுமல்ல உங்களையும் தான் வணங்குகிறார்கள்.''-

பூக்கூடை ஆறுதல் சொன்னது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பு

மாபெரும் குடையாக நிழல் பரப்பி நீண்ட நெடு நாட்களாய் அல்ல-பல வருடங்களாய் அந்த வீதியோரத்தில் ஆலமரம் செழித்து வளர்ந்திருக்கிறது

கோடைவெய்யில் காய்ந்த காலங்களில் குளிரான நிழல்தந்து அரவணைக்கும் அந்த ஆலவிருட்சத்தின் கீழே ஒரு பிச்சைக்காரன்.

பிச்சை எடுப்பதால் அவன் ஒரு பிச்சைக்காரன்.

அவனால் வேலைகள் செய்ய முடியும். செய்தானானால் அவன் வேலைக்காரன்தான்.

ஆனால்-அவன் எங்கே வேலை செய்தான்.

பொழுது புலர்ந்துவிட்டால் வந்து விடுவான் ஆலமரத்தடிக்கு. ஒரு துண்டை, அழுக்குப்படிந்தது-விரித்துவிட்டு அமர்ந்து கொண்டு காலை நீட்டிக் கொள்வான்.

அவனது காலில் ஒரு புண். ஒரே ஒரு புண். சோடாப் போத்தில் மூடியின் அளவைவிட சற்று பெரிதான வட்ட வடிவிலான பெரிய புண்.

இலையான்கள் மொய்க்கும். அவனோ-ஒரு காகிதத்தினால் விசுக்கிக் கொண்டு கையேந்தி-தெருவில் செல்வோரிடம் பிச்சை கேட்பான்.

தனது காலில் உள்ள ஆறாத புண்ணை காண்பித்து - தனக்கு கருணைகாட்டுமாறு கை நீட்டுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் அவனது நிலைகண்டு இரங்கி காசு போட்டுச் செல்வர். மாலையானதும் சேர்ந்த பணத்தை எண்ணி எடுத்துக் கொண்டு - அதில் சொற்பத்தை, கள்ளுக்குடிக்க செலவு செய்வான்.

தனது இருப்பிடத்திற்குப்போய் இரவு உறங்கிவிட்டு மறுநாள் மீண்டும் ஆலமரத்தடிக்கு வந்து தனது தொழிலை ஆரம்பிப்பான்.

ஆலமரம் யோசித்தது.

இந்தச் சோம்பேறி காலின் காயத்தை காண்பித்தே உயிர்வாழப் பழகிக் கொண்டான்.

இவனால் உழைத்து வாழமுடியும்; எங்காவது கூலிவேலைக்கு சென்றால் சம்பாதிக்கமுடியும். ஆனால்- அவனுக்கு இந்த-ஒரே இடத்தில் அமர்ந்து வருவாய் தேடும் பிச்சைத் தொழில் அவனை விட்டு அகலாமல் இருப்பது ஆலமரத்திற்கு எரிச்சலும் சினமும் தந்தது.

தனது மரத்தில் கூடுகட்டி வாழும் பறவைகளை பொழுது புலர்ந்ததும் பல்வேறு இடங்களுக்கும் பறந்து சென்று இரைதேடி உண்டு-தமது குஞ்சுகளுக்கும் எடுத்துவரும் பொழுது- இந்த ஆறறிவு படைத்த- உடலில் வலுவுள்ள மனிதன் எந்தவொரு வேலையும் செய்து வருவாய் தேடாமல் தனது கால் புண்ணைக் காண்பித்தே வயிறு வளர்க்கின்றானே- என்று அவன் மீது ஆலமரத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

இந்தச் சோம்பேறிக்கு நான் நிழல் தருகின்றேனே- என எண்ணியது ஆலமரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அடேய் சோம்பேறி - ஏனிப்படி உலகை ஏமாற்றுகிறாய். ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்துகட்டி கால் புண்ணை சுகப்படுத்திவிட்டு ஒரு வேலையைத் தேடிச் சென்றால் என்ன?''

-இவ்வாறு யாராவது அவனிடம் கேட்கமாட்டார்களா என்றும் ஆலமரம் சிந்தித்தது.

ஒரு நாள்-ஆலமரம் எதிர்பார்த்தவாறு ஒரு வயதான மூதாட்டி அந்த மரத்தடிக்கு வந்தாள்.

அவள் தோசை விற்கும் கிழவி. அதிகாலையே எழுந்து சம்பலும் அரைத்து தோசைகளும் சுட்டு, ஒரு கடகத்தில் வைத்து சுமந்து கொண்டு தனது வாடிக்கை யாளர் வீடுகளுக்குச் சென்று காலை ஆகாரமாக அவற்றை விற்றுவிட்டு பகலானதும் கடைகளுக்குச் சென்று காய்கறி வாங்கிக்கொண்டு மறுநாள் தோசை சுடுவதற்கு தேவையான உளுந்து, அரிசி, மற்றும் சம்பலுக்குத் தேவைப்படும் தேங்காய்- மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை வாங்கிக்கொண்டு வீடு திரும்புவாள்.

வயதான காலத்திலும் உழைத்துச் சாப்பிடும் அவளது குணம் ஆலமரத்திற்கு நன்கு பிடித்துக்கொண்டது.

எவர் கையையும் எதிர்பார்க்காமல் உழைத்துண்டு வாழும் அவளை பார்க்க ஆலமரத்திற்கு பெருமைதான்.

ஆலமரத்தடியில் வந்து நிழலில் இளைப்பாறிய மூதாட்டியிடம் அந்த பிச்சைக்காரன் கையேந்தினான்.

''என்ன வேண்டும்...ராசா....?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோசைவிற்கும் மூதாட்டி கேட்கிறாள்.

''இல்லை தோசை வேண்டும் பசிக்கிறது... மூன்று தோசை தாருங்கள்'' பிச்சைக்காரன் கேட்டான்.

''காசு தா... தோசை தருகின்றேன்'' - இது மூதாட்டியின் பதில்.

''ஐயோ...காசா... நான் பிச்சைகாரன் எல்லோரும் எனக்கு காசு தருகிறார்கள். நீங்கள் காசு தரவேண்டாம். முடிந்தால் மூன்று தோசை தாருங்கள். வயிறார சாப்பிடுவேன். உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும்.'' -பிச்சைக்காரன் கையெடுத்து கும்பிட்டுக் கேட்டான்.

மூதாட்டி சிரித்தாள்.

''என்னிடம் தோசை இருக்கிறது. ஆனால் சும்மா தரமாட்டேன். நீ பிச்சை எடுத்த காசு இருக்கிறதல்லவா.... அதைக் கொடுத்து தோசை வாங்கிச் சாப்பிடு. எனக்கு நீ சொல்லும் புண்ணியம் வேண்டாம்.

''ஒரு சோம்பேறியின் வாயினால் எனக்கு புண்ணியம் வரவேண்டாம்''-மூதாட்டி கண்டிப்பாக சொன்னாள்.

''பாட்டி...இப்படி நீங்கள் சொல்ல லாமா....எனது காலில் உள்ள புண்ணைப் பாருங்கள். நான் பிச்சைக்காரன். என்னிடம் நீங்கள் பணம் கேட்கலாமா?''

''டேய்...என்னைப்பார்...நான் வயதான கிழவி. இந்த வயதிலும் உழைத்துச் சாப்பிடுகிறேன். என்னிடம் நீ சும்மா பணம் கொடாமல் கேட்கலாமா?'' மூதாட்டி முறைத்துப்பார்த்து கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனது நிலை அறிந்தும் இரக்கம் இன்றி இப்படி பேசுகிறீர்களே... நான் என்ன செய்வேன்...இந்த கால் புண் ஆறி சுகமாகிவிட்டால் நானும் உழைத்துச் சாப்பிடுவேன். இப்படி பிச்சை எடுக்க மாட்டேன்.''- என்றான் அந்த பிச்சைக்காரன்

''ஏதோ...அப்படியா...சரி... என்னுடன் வா... அதோ அந்த ஆஸ்பத்திரிக்குப் போவோம்... மருந்து கட்டுவோம். புண் சுகமாகும்.. வருகிறாயா..?'' மூதாட்டி அழைத்தாள்.

''ஐயோ...மாட்டேன். புண் சுகமாகிவிட்டால் பிறகு எப்படி நான் பிச்சை எடுப்பது... எனது தொழிலுக்கே மோசமாகிவிடும்... நான் வரமாட்டேன். என்னால் முடியாது.''- என்றான்.

மூதாட்டி உரத்து கலகலவென சிரித்தாள்.

''ஏ ... அப்படிச்சொல்...காலம்பூராவுமே இப்படி இந்தப்புண்ணைக் காண்பித்தே பிச்சை எடுத்து வாழப் போகிறாய்.. நீ உருப்படமாட்டாய். முடிவில் என்ன நடக்கும் தெரியுமா. இந்தப் புண் புரையோடி - கால் அழுகி- நீ செத்துத்தான் போவாய்... உன்னைப் போன்ற சோம்பேறிக்கு நான் தோசை தரமாட்டேன். பணமும் தரமாட்டேன். உழைத்து உண்; அல்லது செத்துத் தொலை.'' மூதாட்டி சொல்லிவிட்டு தனது தொழிலுக்கு புறப்பட்டாள்.

ஆலமரம் அந்த மூதாட்டியை பெருமையுடன் பார்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி

அந்த ஊரின் ஒதுக்குப்புறமான பகுதியில் ஒரு யானைப்பாகன் வசித்தான்.

அவனுக்கு வருவாய் வழங்கும் ஜீவராசி அந்த யானைதான்.

காட்டு மரங்கள் வெட்டப்படும் பொழுது அந்த மரம் சுமந்து அப்புறப்படுத்தவும் - பாறாங்கற்கள் தூக்கு வதற்கும் மாத்திரமின்றி கோயில் திருவிழாவின் போது ஊர்வலத்தில் கலந்து கொள்ளவும் அந்த யானை பெரிதும் உதவியது.

யானை வளர்த்த பாகன் வீட்டில் ஒரு பூனையையும் வளர்த்தான்.

பூனைக்கு இந்த யானைமீது பொறாமை.

பொறாமைக்கு பல காரணங்கள். யானையைப் பார்ப்பதற்கென்றும்-வேலைகளுக்கு அதனை அழைத்துச் செல்வதற்காகவும் பலர் அங்கு அவ்வப்போது வந்து பேரம் பேசினார்கள்-ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

யானைக்குரிய கூலியை தந்தார்கள்.

ஆனால்-அந்தப்பூனையை எவரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

வேளாவேளைக்கு அதற்கு உணவு மாத்திரம் வைப்பான் அந்த யானைப்பாகன்.

ஆனால்-யானையுடன் மினைக்கெடுமாற் போன்று அவன் பூனைக்காக நேரம் ஒதுக்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி பாகன் யானையுடன் வெளியே போய்விடுவான். ஆனால் ஒரு நாளும் பூனையை அழைத்துச் சென்றதில்லை.

தன்னை பாராமுகமாக நடத்துவதாக கருதியது பூனை.

இதனையிட்டு தனக்குள்ளேயே புழுங்கிக் கொண்டது பூனை.

ஒரு நாள் வெகுண்டது பூனை. நேரே யானையிடம் சென்றது.

''ஏய்... யானையே உன்னுடன் சிறிது பேசவேண்டும்.''- என்றதுபூனை.

யானைக்கு தன்னை இந்த சின்னஞ்சிறிய பூனை ''ஏய்''-என்று விளித்தது கோபமாகிவிட்டது.

எனினும் கோபத்தை அடக்கிக் கொண்டு, ''என்னவோய்?''- என்று தும்பிக்கையை உயர்த்திக் கேட்டது.

பூனை சற்று பயத்தினால் ஒதுங்கி நின்று கதைத்தது.

''நானும் - நீயும் இந்த வீட்டில் தான் வசிக்கின்றோம். ஆனால் உனக்கு மட்டும் அதென்ன விசேட கவனிப்பு? இந்த வீட்டுக்காரன் ஏன் இப்படி பாரபட்சமாக நடக்கிறான்.

''ஓ... உனக்கு அப்படி ஒரு கவலையா? எனது நிலைமை உனக்குப் புரியவில்லை. நீ ஒரு வகையில் கொடுத்து வைத்தவன். நிம்மதியாக - உண்டு உறங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கிறாய் ஆனால் என்பாடு பெரும் பாடுதான். பாடுபட்டு உழைக்கின்றேன். பாரமான மரங்களையும் கருங்கற்களையும் சுமக்கிறேன். திருவிழாக் காலங்களில் இந்தப் பெரிய உடம்பை சுமந்துகொண்டு ஊர்வலத்தில் கால் நோக நடக்கின்றேன். என்னை வேலைக்கு அனுப்பிபணம் சம்பாதிக்கின்றான் அந்தப் பாகன். ஆனால்-உனக்கு ஒரு வேலையும் தராமல் சும்மா உட்காரவைத்து உணவு தருகின்றான். பலவிதத்திலும் உனது வாழ்க்கை சௌகரியமானது என்று நினைத்து ஆறுதல் அடைந்து கொள்.''- சொல்லிவிட்டு நெடு மூச்சொன்றை உதிர்த்தது யானை.

யானை இவ்வாறு உண்மையை உணர்த்திய போதும்தன்னை ஒரு 'தண்டச் சோற்றுக்காரன்' - என மறைமுகமாக சொல்லி விட்டதில் பூனைக்கு கவலையும் கோபமும் பொங்கியது.

''உனது பேச்சைப்பார்த்தால் நான் ஏதோ சும்மா இருந்து சாப்பிடுவதாகவும் நீ மட்டும் உழைத்துச் சாப்பிடுவதாகவும் சொல்கிறாய் போல் தெரிகிறது. நீ உண்ணும் உணவின் அளவைப் பார். நீ உண்பது அதிகம். அதனால் வேலை செய்யத்தானே வேண்டும். இல்லையேல் உண்டவை சமிபாடடையாது.''-என்றது பூனை.

''முட்டாள்தனமாக பேசாதே. நீ-பூனை-நான் யானை. உனக்கும் எனக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. நான் உண்ணும் உணவையும் - எனது உருவத்தையும் மாத்திரம் வைத்து எனது பெறுமதியை எடை போடாதே. 'யானை வாழ்ந்தாலும் ஆயிரம் பொன் - இறந்தாலும் ஆயிரம் பொன்'- என்று முதுமொழியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. அப்படியிருக்க- சும்மா அலட்டிக் கொள்ளாதே. யானை மீண்டும் தும்பிக்கையை உயர்த்திச் சொன்னது.

''ஓமோம்...பெரிதாக முதுமொழி மட்டும் சொல்லிக்கொள். 'யானைக்கும் அடி சறுக்கும்'- என்றும் சொல்லப்பட்டுள்ளதை மறந்து விடாதே. அதுமட்டு மல்ல - மிகச்சின்னஞ் சிறிய எறும்பு உனது தும்பிக்கை துவாரத்துள் நுழைந்தால் உனது பாடு பெரும் திண்டாட்டம் தான். இந்தப் பெரிய உடம்பை வைத்துக் கொண்டு அந்த சின்னஞ்சிறு எறும்பை உன்னால் என்ன செய்துவிடமுடியும்.''- இவ்வாறு சொல்லிவிட்டதில் பூனைக்கு பெருமை.

யானை விட்டுக் கொடுக்குமா?

''அறிவு கெட்ட பூனையே-ஏதோ- எறும்பு எனது தும்பிக்கை துவாரத்தில் மாத்திரம் போய்விட்டால் நான் மிகவும் அவஸ்தைப்படுவேன் என்று நீயும் மற்றவர்களும் சொல்கிறீர்கள். எறும்பின் குணம் கடிப்பதுதான். அது எந்த மூக்குத் துவாரத்துள் நுழைந்தாலும் கடிக்குமே தவிர கொஞ்சாது. எறும்பு உனது மூக்கினுள்ளும் நுழையலாம். மனிதர்களின் காது-மூக்கு-வாயிலும் புகுந்து விடலாம்- என்பதை மறந்துவிடாதே'' என்றது யானை.

''உனக்கு தற்பெருமை அதிகம்'' என்றது பூனை.

''ஆம் உண்மைதான்.நான் பெருமதியானவன். பெருமைக்குரியவன். அதனால் உனது பார்வையில்- அதாவது பொறாமைப் பார்வையில் என்னை தற்பெருமைக்காரன் என்று கணிக்கின்றாய்- ஒன்றை மட்டும் மறந்துவிடாதே... உன்னையும் என்னையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வீட்டுக்காரன்தான் வளர்க்கிறான். ஆனால் அவனுக்குப் பெயர் யானைப்பாகன் தான். எவரும் அவனை 'பூனைப்பாகன்'- என்று அழைப்பதில்லை. உன்னால் உனக்கும் பெருமை இல்லை அவனுக்கும் பெருமை இல்லை. நீ ஒரு சோம்பேறி...தண்டச்சோறு... எனக்கு கோபமூட்டாதே....எங்காவது போய் தொலை. இல்லையேல்... இந்தக் காலால் உன்னை நசித்து கொன்றுவிடுவேன். எனது பலம் தெரியாமல் என்னுடன் மோத வராதே.. ஓடிப்போ..''

பூனை பயந்துவிட்டது. வெருண்டடித்து ஓடியது.

ஓடிக்களைத்து சோர்ந்து போய் கிடந்த பூனையின் கவலையை கேட்டறிந்தது பல்லி.

பல்லியிடம் தனது மனக்குறையை வெளியிட்டது பூனை.

''பூனையாரே... ஏன் சும்மா மனதைப்போட்டு அலட்டிக் கொள்கிறீர். யானை யானைதான்; பூனை பூனைதான். எமது இனத்தைச் சேர்ந்தவைதான் ஓணான்-உடும்பு-முதலை உருவத்தில் எமக்கிடையே நிறைய வேறுபாடுகள். சிறிய பல்லியாகிய நான் ஓணானாகவோ -உடும்பாகவோ - முதலையாகவோ மாறமுடியாது. முதலில் - உங்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்க முயலாதீர்கள்'' என்று புத்திமதி சொன்னது பல்லி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறை

புதர்களுக்குள் புகுந்தும், வெளியே வந்தும் துள்ளித் துள்ளித் திரிந்த முயல் தனக்கு ஆகாரமும் தேடிக் கொண்டிருந்தது.

எனினும் இந்தச் சுதந்திரம் எப்பொழுதும் தன்னிடமிருந்து பறிக்கப்பட்டுவிடுமே என்ற கவலையும் -எவருக்கும் இரையாகிப்போய்விடுவேனோ என்ற பரிதவிப்பும் முயலைவிட்டகலவில்லை.

முயல் வேட்டைக்காரர்களின் கண்களிலிருந்து தப்புவதற்காக புதர்களுக்குள் புதையுண்டாலும்- சுதந்திரமாக காற்றை சுவாசிக்க மட்டுமல்ல- அருகே சேறும் சகதியும் நிரம்பிய குட்டையினுள் உருண்டு படுத்துப் புரளும் அந்தப் பன்றியின் திருவிளையாடல்களை பார்த்து ரசிக்கவும் அடிக்கடி வெளியே வந்தது.

முயலுக்கு பன்றியை பார்க்கும்போதெல்லாம் அருவெறுப்பாகத்தானிருக்கும். ஆயினும் தனது பொழுது அதன் 'சேறாட்டம் பார்த்து கழிவதில் கடந்தது.

''என்ன முயலே... வேடிக்கையா பார்க்கிறாய். கவனம்... முயல்வேட்டைக்காரர்கள் வருவார்கள். நீ... என்னையே பார்த்துக் கொண்டிரு....வருபவன்கள் உன்னைச் சுட்டுக்கொன்று எடுத்துப்போய்விடுவார்கள்.'' -இவ்வாறு சொன்ன பன்றி சகதியில் தன் முதுகைச் சாய்த்துதேய்த்துக் கொண்டது.

''பன்றியே-நீயும்தான் கவனம். நானாவது அந்த வேட்டைக்காரர்களை கண்டதும் இந்த புதருக்குள் ஓடி மறைந்துவிடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தப்பவிட்டவர்கள்,பிறகு உனக்குத் தான் குறிவைத்துகறிசமைப்பார்கள்.''-முயலும் பதிலுக்குச் சொன்னது.

பன்றி யோசித்தது.

''நீ சொல்வதும் சரிதான்...நானும் அவர்களிடமிருந்து என்னைச் காத்துக் கொள்வதற்கு ஒரு தந்திரம் வைத்துள்ளேன்''- என்றது.

''என்ன தந்திரம்?''

''வேட்டைக்காரர்களின் காலடி அரவம் கேட்டதும் இந்த சேற்றுக்குள் புதைந்துகொள்வேன். எனது மூக்கை மாத்திரம் சுவாசிப்பதற்காக சற்று வெளியே நீட்டிக் கொள்வேன். எப்படி எனதுமூளை. நீ என்ன செய்வாய்?''

''நானும் வழக்கம்போன்று இந்தப் புதருக்குள் ஓடி என்னை மறைத்துக் கொள்வேன்.'' முயல் துள்ளிக் கொண்டு சொன்னது.

பன்றி உரத்துக் சிரித்தது.

''ஏன் சிரிக்கிறாய்?''-முயல் கேட்டது.

''எனது நிறம் கறுப்பு. சேறும் சகதியும் எனது உடம்பில் இருப்பதனால், நான் இந்தக்குட்டையில் மறைந்தாலும் வேட்டைக்காரர்களின் கண்களிலிருந்து தப்பி விடுவேன். ஆனால் நீயோ - வெள்ளை நிறம். புதருக்குள் மறைந்தாலும் உனது நிறம் உன்னைக் காட்டிக் கொடுத்து விடும்.''-என்று சிரித்துக் கொண்டே சொன்னது.

''அதற்காக என்னையும் உன்னுடன் வந்து இந்த சகதியில் மூழ்கச் சொல்கிறாயா? நான் மாட்டேன். நான் எப்பொழுதும் துப்புரவாக இருப்பேன். உன்னைப் போன்று மலம் தின்று - சேற்றில் புரளமாட்டேன்.''- முயல் மிடுக்காகச் சொன்னது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏய்... முயலே- நீ ...எனது சமூக சேவையை ஏளனம் செய்கிறாய். இந்த கிராமத்தில் வசிப்பவர்களுக்கு மலகூடங்கள் இல்லை. அவர்கள் இந்த ஒதுக்குப்புறம் வந்துதான் தமது காலைக்கடன் கழிக்கிறார்கள். அந்தக் கழிவுகளை உண்டு இந்தப்பகுதியை நான் துப்புரவாக வைத்திருக்கிறேன் என்பது கூட உனக்குத் தெரிய வில்லையா?''

-பன்றி இப்படிச் சொன்னதும் முயலுக்கு வயிற்றை குமட்டியது. சத்தி வருமாப்போல் இருந்தது.

முயற்சித்துஅடக்கியது, அருவெறுப்புடன் பன்றியைப் பார்த்தது.

''மனித மலம் உண்ணும், உன்னை எப்படித்தான் இந்த மனிதர்கள் வேட்டையாடி உண்கின்றார்களோ... ஐயோ... நினைத்தாலே- எனது வயிற்றை பிரட்டுகிறது.''

''முயலே... ஏன் என்னை இப்படி அவமானப் படுத்துகிறாய். என்னைப்பற்றிய பூர்வீகம் உனக்குத் தெரியாது போலும். எம்மையெல்லாம் படைத்த ஈசன் - எம்பெருமான்-சிவபெருமான் ஒரு தடவை - பன்றிக்குட்டி களுக்கு பால் கொடுப்பதற்காக பன்றி உருவம் எடுத்ததாக புராணக்கதை ஒன்றுண்டு. நீ கேள்விப்பட்டதில்லையா?''

''கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் இரக்கத்தினால் அன்று அந்தக் குட்டிகளுக்கு பால் கொடுத்திருக்கலாம். அதற்காக உனது அருவெறுக்கத்தக்க செயலை ஏற்றுக் கொண்டுவிட்டார் என்பது அர்த்தமல்ல.''-முயல் மீண்டும் துள்ளியது.

''சும்மா துள்ளாதே.. துள்ளும் மாடு பொதி சுமக்கும்' என்று பழமொழியும் இருக்கிறது. நீ அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதரை விட்டு வெளியே வந்தது என்னை ஏளனப் படுத்தத்தானே....''

''எனக்கு புதருக்குள் பொழுது போகவில்லை-நீ சேற்றில் புரண்டு விளையாடும் காட்சியை கண்டு களிக்க வந்தேன்.''என்றது முயல்.

அந்தக் கணம் - வேட்டைக்காரர்களின் காலடி அரவம் கேட்டது.

முயல் தாவித்துள்ளி புதருக்குள் ஓடி மறைந்தது. பன்றியும் சேற்றுக்குள் தன்னை முழுமையாக புதைத்து மூக்கை மாத்திரம் சற்று வெளியே நீட்டிக் கொண்டது.

வேட்டைக்காரர்கள் சில நிமிடங்கள் அங்கு தரித்துநின்று முயலைத் தேடினர் அந்தக்குட்டையின் அருகில் எங்காவது பன்றி மேய்ந்து கொண்டிருக்கலாம் என்ற எண்ணத்தில் சுற்றும் முற்றும் பார்த்தனர்.

அவர்களுக்கு மிகுந்த ஏமாற்றம். அவர்களுக்கு வேட்டையாட முயலும் பன்றியும் சிக்கவில்லை.

அவர்கள் சொற்ப நேரத்தில் திரும்பிச் சென்றனர்.

வேட்டைக்காரர்களின் காலடி அரவம் மறைந்த பின்பு - பன்றி மெதுவாக சேற்றிலிருந்து வெளியே வந்தது. அதன் உடல் பூராவும் சகதி தலையை உயர்த்தி முயலைத்தேடியது.

முயலும் மெதுவாக புதரைவிட்டு வெளியே வந்தது.

வேட்டைக்காரர் காலடி ஓசை கேட்டு பதட்டத்துடன் புதருக்குள் ஓடுகையில் -அந்த முயலின் மிருதுவான வெள்ளைத் தோலில் சிறிது அழுக்கு படிந்து விட்டது. புதரில் படிந்து மண்டிக்கிடந்த தூசியினால் அந்த வெள்ளைத் தோல் சிறிது அழுக்கானது. முயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை நிறமாகையால்- அந்தச் சிறிய அழுக்கு துலாம் பரமாக தெரிகிறது.

இந்தக்கறை பன்றியின் கண்களுக்கு தென்பட்டது.

**"வா...வா..முயலே...**

**வந்தவர் போயினர்....**

**வா...வா...முயலே...**

**கறை படிந்த வெள்ளை முயலே..."**

பன்றி பாட்டுப்பாடியது.

முயல் தனது உடலை ஒரு தடவைபார்த்தது.

உடலில் படிந்த தூசி அழுக்கை புற்தரையில் துடைத்துக் கொண்டது.

''நான் சேற்றுள் மூழ்கிப்புரள்வதாக என்னை ஏளனம் செய்தாயே-இப்போது பார். உனது அழகான மிருதுவான வெள்ளை உடலிலும் அழுக்குக் கறை படிந்திருப்பதை'' பன்றி, தான் முயலை அவமானப் படுத்திவிட்ட உற்சாகத்தில் உரத்துக் குரல் கொடுத்தது.

முயல் மிகவும் அமைதியாக சொன்னது:-

''பன்றியே... எனது உடல் தூய வெண்மை. என் உடல் மீது சிறிய புள்ளியாக அழுக்கு படிந்தாலும் சட்டென வெளிப்பார்வைக்குத் துலங்கும். ஆனால்- நீ எப்பொழுதுமே சேற்றிலும் சகதியிலும். அழுக்குக் கறையை உனது கருப்புத்தோல் காட்டிக் கொடுக்காது?''

முயல் தனக்கு இரை தேடிச் சென்றது.

பன்றி மீண்டும் சேற்றில் புரண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதர்கள்

வேப்பமரம் கிளைகள் விட்டு நிழல் பரப்புகிறது. அருகே நாவல் மரம் பழங்களை உதிர்க்கிறது.

இரண்டுமே செழுமையாக வளர்ந்திருக்கின்றன. அவை வாழும் அந்தக் காணியில் வீடுகட்டி குடிவந்தது ஒரு குடும்பம்.

குடும்பத்தலைவி சொன்னாள்; ''வேப்பமரம். நல்ல மரம். ஆரோக்கியத்துக்கு உகந்தது. வேப்பங் குச்சியினால் பல்லுத்துலக்க முடியும். பல்லுக்கும் உறுதி. பிள்ளைகளுக்கு 'அம்மை' வந்தாலும் - வேப்பிலை பெரிதும் உதவும். வேப்பம் பூவில் வடகம் தயாரிக்க முடியும். வேப்பிலைகள் உதிர்ந்து விழுந்த கிணற்று நீர் கண்களுக்கு குளிர்மை தரும்.'

வேப்பமரம் இது கேட்டு பெருமையுடன் நாவல் மரத்தைப் பார்த்தது.

தன்னைப்பற்றி எவரும் ஏதும் சொல்லமாட்டார்களா என ஏங்கிக் காத்து நின்றது நாவல் மரம்.

அந்த வீட்டின் சிறுவன் ஓடிவந்து தரையில் கிடந்த நாவற் பழங்களை ஊதி ஊதி சாப்பிட்டான்.

குடும்பத் தலைவியான தாய் கேட்டாள்...'' மகனே நீயும் ஔவைப் பாட்டி போன்று சுட்ட பழம் சாப்பிடுகிறாயா?''

நாவல் மரம் இது கேட்டு சிலிர்த்துக் கொண்டது.

அடடா மறந்தே விட்டேனே. நாவல் மரத்திலல்லவா பாலமுருகன் அமர்ந்து கொண்டு ஔவைக்கு ஞான உபதேசம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்ப மரத்தை விட எனக்குத்தான் பெருமையும் புகழும் கீர்த்தியும் அதிகம்.

நாவல் மரம் தான் நினைத்ததை சொன்னது.

வேப்பமரம் தனது கிளைகளை அசைத்து ''அவசரப் படாதே நாவல் மரமே-நானும் கீர்த்திமிக்க மரம்தான். அம்பாள் சந்நிதிகளில் நான் கவனிப்புக்குள்ளான தாவரம். எனது வேப்பிலை கொப்புகளை அங்கு தொங்க விடுவார்கள்.

அம்மை வடுக்கள் மாறுவதற்காக-மஞ்சளும் வேப்பிலையும் கலந்து அரைத்து பூசிக்குளிப்பார்கள். நான் வேப்பெண்ணெய் தயாரிக்கவும் சவற்காரம் தயாரிக்கவும் பயன்படுகிறேன். உன்னால் யாருக்குப் பயன்? கருத்த நாவல் பழங்களை மட்டும்தானே உன்னால் உதிர்த்து கொட்ட முடியும்.''

நாவல் மரம் சிரித்தது.

''என்னைக் கருப்பு என்கிறாயா?'

''ஆமாம்-வேப்பம் பழம் இளம் சிவப்பு கலந்த மஞ்சள். பார்க்க அழகாகவும் இருக்கும். ஆனால் உனது பழமோ கருப்புதானே.

''நிறத்தை ஏன் பார்க்கிறாய்-எனது ருசியைப்பார், மக்கள் நாவற்பழத்தைத்தான் விரும்பி உண்பார்கள். வேப்பம் பழம் கசக்கும் என்பார்கள்.'' என்றது நாவல் மரம்.

''மருந்து கசக்கும். ஆனால் நோயை குணப்படுத்தும். வேப்பம் பழத்தின் கொட்டையிலிருந்து வேப்பெண்ணை தயாரிக்கப்படுகிறது. அது சில நோய்களுக்கு நிவாரணி.அந்த வீட்டின் தலைவி சொன்னதை கேட்டாய் தானே. நான் பலவிதங்களில் மக்களுக்கு உதவுகின்றேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மரங்களினதும் வாதப்பிரதி வாதங்களை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தது தென்னைமரம்.

''அட முட்டாள் மரங்களே- ஏன் சும்மா தம்பட்டம் அடிக்கிறீர்கள். நான் தரும் பயனை விடவா அதிகமாக நீங்கள் மக்களுக்கு தருகிறீர்கள்.

இளநீர்-தேங்காய், மட்டை, பதநீர், கள்ளு, தென்னஞ் சாராயம், கிடுகு, சிரட்டை, தும்பு, வீட்டுக்கூரைக்கு மரம்..... இப்படியாக பல்வேறு வழிகளில் இந்த மக்களுக்கு உதவுகின்றேன். வேப்ப மரம்-ஏதோ வேப் பெண்ணெய்யாக தான் மாறுவதாக சொல்லி பீற்றிக் கொள்கிறது.

தேங்காய் எண்ணையாகவும் -தேங்காய்ப்பாலாகவும் எனது அங்கங்கள் மக்களுக்கு பயன்படுவதை மறந்து விட்டதே.''-என்றது தென்னைமரம்.

நாவ'ல் மரம் தனதுகிளைகளை அசைத்து ஆமோதித்தது.

''பார்த்தாயா வேப்ப மரமே - தென்னையின் பயனை. ஏதோ- உன்னைவிட்டால் ஆளில்லை என்று கத்தினாயே.'' நாவல் மரம் தென்னையின் பக்கம் சார்ந்து பேசியது.

''சரிதான் போதும் பொத்திக் கொண்டிரு...உனக்கு என்னுடன் மோதுவதற்கு சுயபலம் இல்லை. அதனால் தென்னையுடன் சேர்ந்து கொண்டு பேசுகிறாய்.'' -வேப்பமரம் கோபத்துடன் சொன்னது.

தென்னை - வேம்பு - நாவல் மரங்கள் மூன்றும் வாதிட்டதைப்பார்த்துக் கொண்டு கிணற்றடியில் நின்ற வாழை அட்டகாசமாகச் சிரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மூன்று மரங்களும் கிணற்றடிப்பக்கம் திரும்பிப்பார்த்தன.

''ஏன் சிரிக்கிறாய்''-என்று ஏககுரலில் கேட்டன.

''சிரிக்காமல் என்ன செய்வது. நானும் தான் பயன் படுகிறேன். வாழை மரம் மங்களகரமானது. கோயிலில் கட்டுவார்கள். திருமணங்களுக்கும் நான்தேவை. வாழைக்காய், பழம், வாழைப்பூ, வாழைத்தண்டு- வாழையிலை... என்று பல பயன்கள் என்னாலும் உண்டு மரங்களே, என்னையும் மறந்து விடாதீர்கள். அதுமட்டு மல்ல - வெட்டத் தழைக்கும் வாழை' என்ற பெருமையும் எனக்குண்டு''

வாழை தனது குலையை ஆட்டிச் சொன்னது.

''போதும் போதும் சும்மா ஆட்டாதே. தலை முறிந்துவிடும்''-என்றது அருகே நின்ற மாமரம்.

இப்பொழுது தென்னை- வேம்பு- நாவல்- வாழை- நான்கும் மாமரத்தை நோக்கின.

''மாவிலை, மாங்காய், மாம்பழம், மாம்பலகை... கேள்விப்பட்டதுண்டா; இப்படியெல்லாம் நானும் மக்களுக்கு பயன் படுகின்றேன். எனவே எங்களில் யார் உயர்வு, யார் தாழ்வு என்ற வீண் ஆராய்ச்சிகள் எதற்கு?''-எனக் கேட்டது மாமரம்.

மரங்கள் அமைதியடைந்தன.

நாட்கள் சக்கரம் பூட்டிக் கொண்டு வேகமாக ஓடிவிட்டன.

அந்த வீட்டின் சிறுவன் வளர்ந்து பெரியவனாகி விட்டான். வாழையும் தன் சந்ததிபெருக்கியது தென்னையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேம்பும், நாவலும், மாமரமும் அந்த இளைஞனின் வளர்ச்சியை வியப்புடன் பார்த்தனர்.

தங்கள் நிழலில் ஓடி ஆடி விளையாடித் திரிந்த சிறுவன் இப்பொழுது இளம் காளையாக இப்படி வளர்ந்திருக்கிறான் அவனுக்கு திருமணத்திற்கு ஏற்பாடாகியது.

அவன் பெற்றோர் அந்த வீட்டின் காணியிலே பெரிய பந்தல் அமைத்து திருமணத்தை 'ஜாம்ஜாம்' என்று நடத்தத் தீர்மானித்தனர். காணியில் வளர்ந்துள்ள மரங்களை வெட்ட வேண்டும்.

குடும்பத்தலைவன் கூலியாட்களை அழைத்து வந்து மரங்களை வெட்டித்தறிக்க முனைந்தான்.

மரங்கள் அழுதன. பெருங்குரல் எடுத்து அழுதன.

அவற்றின் அழுகை அந்த மனிதனுக்கோ-கூலி ஆட்களுக்கோ கேட்கவில்லை.

''ஐயோ...அழியப் போகின்றோமே...''-என்று ஏக காலத்தில் குரல் எழுப்பின.

கிணற்றடியில் குலைதள்ளிய வாழை மரங்கள் திருமணப் பந்தலுக்குத் தேவைப்பட்டது.

வாழை மரமும் வெட்டப்படும்.

பந்தல் அமைப்பதற்காக மரங்களை வெட்டிச் சாய்த்து அப்புறப்படுத்தினார்கள்.

இவ்வளவு காலமும் இம்மரங்களுக்கு தண்ணீர் வழங்கிய கிணறு நீண்ட பெரு மூச்சை விட்டது.

''இந்த மனிதர்களே இப்படித்தான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டி சொன்ன கதைகள்

**வா**ய்மொழி மூலம் கதை என்ற கலைவடிவம் தோன்றியதே இந்தப் பாட்டிமாரின் வாயிலிருந்துதானோ என நான் நினைத்துப் பார்ப்பதுண்டு. அந்தளவிற்குத் தாங்கள் கண்டது, கேட்டது, அனுபவத்தில் அறிந்தது எல்லாவற்றையும் சேர்த்துச் செதுக்கிக் கதை பண்ணுவதில் இந்தப் பாட்டிமார்கள் தனித் தகுதி பெற்றுத் திகழ்ந்ததுடன் அக்கலையைக் காலங் காலமாக வாய்மொழி மூலம் தங்கள் பேரரிடம் சொல்லியே தக்கவைத்துக் கொண்டு வந்துள்ளனர்.

ஆசிரியர் முருகபூபதி ஆஸ்திரேலியா போனவர் இந்த மண்ணை மறக்கவில்லை: மக்களை மறக்கவில்லை: ஈழத்து இலக்கியத்தை மறக்கவில்லை. அதன் அறிகுறிதான் **பாட்டி சொன்ன கதைகள்.**

- **டொமினிக் ஜீவா**
- பதிப்புரையிலிருந்து

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org